# திராவிடநாடு

3—4—60 | வார வெளியீடு | விலை 16 காசு


## நீ என்னை!

[ முத்துதாசன் ]

முத்துக் கொடுக்கும் கடலெல்லை!
    முட்டித் தடுக்கும் மலையெல்லை!
பத்தும் தொகையும் பரிபாடலும்
    பாடும் குறளும் மலர்க்கொல்லை!
சொத்தின் வளமும் பசும்பொன்னும்
    சுரந்து கொடுக்கும் நிலக்கொல்லை!
இத்தனை மிக்க எம்நாடு,
    இடரில் கிடப்ப தெதற்காக?

இல்லை என்பதழித்தான் ஒருவள்ளல்
    வேலைப் பிடித்தான் மற்றொருவன்!
எல்லை மிதித்த அந்நியனின்,
    எலும்பை ஒடித்தான் கோச்சோழன்!
சொல்லைப் பழித்த இருகோவை,
    சுமந்தார் கல்லைத் தலைமேலே!
இல்லை நமக்கு ஈடெங்கும்
    என்றான் தமிழத் திருமாறன்!

மெய்யில் தைத்த வேல்கொண்டு
    வேழம் கொன்றான் முன்னாளில்!
கையில் வாளைப் பிடித்துப்பின்
    களத்தில் குதித்தார் அன்னாளில்!
செய்யார் வென்ற முன்மக்கள்
    சிறப்பாய் வாழ்ந்தார் தென்னாட்டில்!
ஐயோ! தோழா! நீயென்னாளி
    அடிமை நாட்டை விடுவிப்பாய்!

# மனித உரிமைக்கு ஒரு சோதனை

(அன்பு)

தென் ஆப்பிரிக்கா — ஆப்பிரிக்கர்கள். முன்னது ஆப்பிரிக்காவின் ஒரு பகுதி; பின்னவர்கள் அந்த நாட்டின் உரிமை பெற்ற குடிமக்கள். இதற்கிடையில் அண்டி வாழவந்தது; இனத்தால், மொழியால் தேசத்தால் வேறுபட்ட ஒரு சிறு ஐரோப்பியக்கூட்டம். போக்கு மாறியது, வாழவந்தவர்கள், வாழ்ந்துவந்தவர்களை ஆளத் தொடங்கினார்கள். அதன்பின் ஆண்ட இனம் அண்டி வாழும் நிலை ஏற்பட்டது. உரிமை அவர்கள் வாழ்வினின்றும் களையப்பட்டது. அடிமைத்தனம் அவர்கள் மீது உண்டாக்கப்பட்டது. வாழ்வு தேட வந்த ஒரு சிறு கூட்டம், அங்கு வாழ்ந்துகொண்டிருந்தவர்களின் அரசைப் பறித்தது. நாங்கள்தான் இந்த நாட்டின் குடிமக்கள் என்று பெருமையோடு இருந்தவர்களெல்லாம் நாட்டின் ஒரு மூலைக்குத் துரத்தப்பட்டனர். அவர்களின் இயற்கை உடல் நிறத்திற்கு அவர்கள் என்ன செய்வார்கள்! ஆனால் அதுவே அவர்களை வாழ்நாள் பூராவும் பல இன்னல்களை அனுபவிக்கச் செய்தது. அவர்களின் நிறமே ஒரு ஒதுக்கல் சட்டம் எழக்காரணமாயிற்று.

காலப்போக்கு மேலும் மாறியது. உரிமையுணர்ச்சி மறையாத உயிர்கள் இன்னும் வாழ்ந்துகொண்டுதானிருந்தன. விடுதலைத் தாகம் பல போராட்டங்களுக்கு வித்திட்டது. நெறி புரண்ட நிறவெறி ஆட்சியும் தனது கொடுமைக் கரங்களை இன்னும் நீட்டியது. இன ஒதுக்கல் சட்டம் இன்னும் பெரிய அளவில் கடைப்பிடிக்கப்பட்டது. அரசியல் பிரதிநிதித்துவமும், பொருளாதார சமத்துவமும் முன்னரே பறிக்கப்பட்டதோடு, "அடையாளச் சீட்டு" சட்டம் அமுலாக்கப்பட்டது. "நான்தான் இந்த நாட்டின் உரிமையுள்ள குடிமகன்" என்று கூறித் தெரியவேண்டிய காலம உண்டாக்கப்பட்டது. குடியிருக்கும் உரிமையை, குடியுரிமையில்லா ஒரு அரசு வழங்க நேர்ந்தது. நியாய உணர்ச்சியும், விடுதலை வேட்கையும் ஒன்றை ஒன்று போட்டி போட்டுக்கொண்டு வெளிக் கிளம்பின. ஆப்பிரிக்கர்கள் — தங்கள் குடியுரிமையை மீட்க உயிர்ப் போராட்டத்துக்குத் தயாராயினர். ஆண்டொன்றுக்கு ஏழு இலட்சந்துக்கு மேலான ஆப்பிரிக்கர்கள் இந்தப் போராட்டத்தில் கைதாயினர்.

போராட்டத்தின் உணர்ச்சி வேகம் இருகிழமைகளுக்கு முன்பு (மார்ச் 21) ஒரு உச்ச நிலையை அடைந்தது. அகில ஆப்பிரிக்கக் காங்கிரஸ் என்ற ஒரு விடுதலைக் கட்சி எல்லா ஆப்பிரிக்கர்களையும் "அனுமதிச் சீட்டு" இல்லாமல் வெளியே வந்து போராடிக் கைதாகுங்கள் என வேண்டுகோள் விடுத்தது. பல இலட்சக்கணக்கான ஆப்பிரிக்கர்கள் தங்கள் பிறப்புரிமையையும், குடியுரிமையையும் இழிவுபடுத்தும் "அனுமதிச் சீட்டு சட்ட"த்தை எதிர்த்து அனுமதிச் சீட்டில்லாமலே வெளியே வந்து போராட்டத்தில் இறங்கினர். இனவெறிகொண்ட வெள்ளையரின் துப்பாக்கிகளும், டாங்கிகளும் ஆப்பிரிக்கர்கள்மீது குண்டுமாரி பொழிந்தன. நாட்டுணர்வு கொண்ட நூற்றுக்கணக்கான ஆப்பிரிக்கர்கள் தங்கள் செங்குருதியைச் சொந்த மண்ணில் பாய்ச்சி விடுதலைத் தாகத்துக்கு மேன்மேலும் வித்திட்டு உயிரைத் துறந்தனர். வெள்ளையர்களின் இனவெறியும் ஆதிக்க உணர்ச்சியும் மனித உணர்ச்சிகளைக் குழி தோண்டிப் புதைத்த பூரிப்பால், பிணமலைகளையும், இரத்த ஆறுகளையும் கண்டு வெற்றிக் களிப்புக் கொண்டது.

மேற்கண்ட நிகழ்ச்சிகள்தான் ஆப்பிரிக்காவில் பல ஆண்டுகளாக நிகழ்ந்ததும், குறிப்பாகத் தென் ஆப்பிரிக்காவில் சில நாட்களுக்கு முன் நடந்ததுமாகும்.

இனவெறிக்கு ஒரு மாதிரியாக ஆதிக்க ஆட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் தென் ஆப்பிரிக்க யூனியன் அரசாங்கத்தின் அரசுக் கட்டிலில் பிரதமராகப் பதவி வகித்து வருகிறார் டாக்டர் வெர்வோர்ட் என்பார். சென்ற பிப்ரவரித் திங்களில் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் தனது ஆப்பிரிக்கச் சுற்றுப் பயணத்தின் போது விடுதலை உணர்ச்சிக்கு... இப்போதெல்லாம் காற்று மிகவும் சாதகமாக உள்ளது. நாம் விரும்புகிறோமோ இல்லையோ தேசீய உணர்வு "என்பது ஒரு அரசியல் உண்மை. நாமெல்லாம் அதை உண்மையாகக்கொண்டு மதித்து நடக்க வேண்டும்" என்று, தனக்கு 'விதி'க்கப்பட்டிருந்த ஒருசில மறைமுக வேண்டுகோள்களையும் புறக்கணித்து ஆங்காங்கே ஆப்பிரிக்க காலனி ஆதிக்க நாடுகளில் எழுந்து வெற்றி பெற்றுவரும் சுதந்திர உணர்வுக்கு ஆதரவு அளித்துப் பேசினார். ஆனால் மாக்மில்லனது நம்பிக்கை ஒளி பொருந்திய அப்பேச்சை அப்போதே, தனது சொல்லால் மறைமுகமாக ஊதி அணைத்த டாக்டர் வெர்வோர்ட் தான் இப்போது மற்றைய ஆப்பிரிக்க நாடுகள் ஆங்காங்கே விடுதலை அடைந்துவரும் மாபெரும் உண்மையையும் புறக்கணித்து நடப்பவராகக் காட்டிக்கொண்டிருக்கிறார்.

தென் ஆப்பிரிக்காவை ஆதிக்க, நிறவெறி கொண்ட வெள்ளையர் ஆட்சியினின்றும் மீட்க அங்கு இதுவரையில் இரு கட்சிகள் தோன்றிப் போராடிக்கொண்டிருக்கின்றன. சமீபத்திய, அனுமதிச் சீட்டுச் சட்டத்தின் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்திவரும் அகில ஆப்பிரிக்க காங்கிரஸ் என்ற கட்சி ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பினின்றும் பிரிந்து வந்த ஒன்று.

இரஷ்ய டாஸ் பத்திரிகைக் குறிப்பின்படி தற்போது அகில ஆப்பிரிக்க காங்கிரஸ் நடத்திவரும் இந்த விடுதலைப் போராட்டத்தில் 200 பேர்களுக்குமேலாகச் சுடப்பட்டு உயிரிழந்திருக்கின்றனர். 400 பேர்களுக்கு மேலானவர்கள் அதிக அளவில் சேதமடைந்திருக்கின்றனர். அமெரிக்காவிலிருந்து வெளிவந்திருக்கும் மற்றொரு செய்தியொன்று 300 பேர் வரையில் உயிரிழந்திருக்கின்றனர் என்று கூறுகின்றது. போராட்டக்காரர்களை ஆயுதங்கள் கொண்டு அடக்க ஆகாய விமானங்கள்கூட உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

# நாசர் வருகை

மலர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (3—4—60) தனிப் பிரதி 16-காசு [ இதழ் 38

எதிர்காலத்தைப்பற்றி நாம் ஒன்று நினைக்க, வேறு ஒன்று வந்து முடிகிறது. இல்லாவிட்டால் படித்து, பட்டம்பெற்று, வழக்கறிஞராக வந்து தொழிலில் முன்னேறவேண்டும் என்றிருந்த காமல் அப்துல் நாசர் ஒரு ஐக்கிய அரபுக் குடியரசின் தலைவராக இந்தியத் துணைக்கண்டத்திற்கு இந்தக் கிழமை வருகை தந்திருக்க முடியுமா?

சரித்திர முக்கியத்துவம் பெற்றுவிட்ட, பாண்டுங் மாநாட்டில், ஒரு நெடிய உருவம் பார்ப்பவர் நினைவிலிருத்தும் அரசியல் தோற்றத்துடன் அங்கு விவாதிக்கப்பட்ட ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் அரசியல் ஆதரவு உடையதாக இருந்ததை மற்ற நாட்டுப் பிரதமர்கள் கண்டார்கள். ஆனால் அத்துணை பேர்களது எண்ணமும் வீண்போகவில்லை. அரசியல் இலக்கணங்கள் அத்துணையும் பொருந்திய அதே உருவம் தான் 1956-ம் ஆண்டு திடீரென்று ஒரு நாள் "எகிப்தின் சூயசுக் கால்வாய் எங்களுக்கு உரிமையாக்கப்பட்டிருக்கிறது" என்ற துணிகரமான அறிவிப்பை உலக நாடுகள் அனைத்துக்கும் அறிவித்தது என்பதை மனித இனம் முழுமையும் கண்டுகொண்டது.

அடிமை நாடுகள் பலவற்றைத் தன் கைப்பிடியில் வைத்திருப்பதும், அணு, ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் முதன்மை இடம் பெறவேண்டும் என்ற எண்ணமும் ஒரு அரசியல் பெருமையாகக் கருதப்பட்டுவரும் இந்நாளில், அணு ஆயுதங்கள் ஏதும் இல்லாமல், 'அடிமை நாடுகளை' விரும்பாமல் அராபிய மக்களின் ஏகோபித்த ஆதரவை மட்டுமே கொண்டு, உலக அரசியல் தலைவர்களில் தானும் ஒரு முக்கியமானவராக வளர்ந்திருக்கும், நாசர், உண்மையிலேயே அரசியலுக்கு முற்றிலும் பொருந்திய ஒரு தலைவர் தான்.

சிறு பிள்ளைகள் விளையாட்டுப்போல், சூயஸ் தனக்கில்லையென்றதும், அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும், உதவிக் கரங்களை திரும்ப இழுத்துக்கொண்டு அஸ்வான் அணைத் திட்டத்தைப் பாதியிலேயே நிறுத்த முயற்சித்தும், அவர்கள் எண்ணம் எல்லாம் பொய்ப்பிக்கச் செய்து, அஸ்வான் அணைக்கட்டின் வேலைத்திட்டத்தைச் சமீபத்தில் ஆரம்பித்து வைத்துவிட்டு, இன்று இந்தியத் துணைக்கண்டத்துக்கு வருகை தந்திருக்கும் நாசர், தன்னம்பிக்கையில் முழு நம்பிக்கைகொண்ட ஒரு மாபெரும் மனிதர் தான்.

ஐக்கிய அரபுக் குடியரசு தேசிய அடிப்படையில் ஒன்றுகிவருவதைக் காணப்பொறுத ஏகாதிபத்திய கூட்டுச் சக்திகள், இஸ்ரேல் என்ற ஒரு 'வேண்டாத' நாட்டைச் சிருஷ்டித்து, அதன் மூலம், அரபுக் குடியரசில் நாளுக்கு நாள் பெருகி வரும் தேசியப் பண்பை சிதைத்துவிடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் நிலையில், தனக்குப் பெரும் தலைவலியைக் கொடுத்துக்கொண்டிருக்கும் இஸ்ரேல்—சிரியா எல்லைக் குழப்ப இடங்களில் கடந்த முப்பது நாட்களுக்குமேல் சுற்றுப்பயணம் செய்துவிட்டுப் புயலின் நடுவில் அமைதி காண விழைவதுபோல், இங்கு வருகை தந்திருக்கும் நாசர், சிதறிக்கிடந்த அரபுக் குடியரசைத் தேசிய, இன அடிப்படையில் ஒன்றுக்கி வைத்த ஒரு "அதிசய உருவம்" தான்.

அதுவரையில், அந்நிய நாடுகளுக்கு ஒரு சரண்டு மிடமாகவும் பரூக் மன்னனின் சர்வாதிகார ஆட்சிக்கு அடிமைப்பட்ட ஒரு நாடாகவும் இருந்த எகிப்தை 1952-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 23-ம் நாள், விடுவித்த பெருமையால் குடியரசின் தலைவரானார் நாசர். ஏழை, நடுத்தரமக்களை என்றும் மனதில்கொண்டவர் என்பதற்குச் சான்றாக அமைந்திருந்தது அவர் பதவிக்கு வந்ததும், நாடு முழுதும் செயலாக்கிய நிலச்சீர்திருத்தம்; மறைந்து வரும் முதலாளித்துவ கொள்கைகளை உணர்ந்துகொண்ட வகையிலும், தோன்றி வரும் சோஷலிச நடைமுறைகளை ஏற்றுக்கொண்ட வகையிலும் தலைவர் நாசர் சமீபத்தில்தான் தனது நாட்டிலுள்ள பாங்குகள் அனைத்தையும் தேசியமயமாக்கினார்.

உலகம் அமைதிப் போட்டி வழியில் இயங்க வேண்டும் என்ற கொள்கைக்கு உண்மையாக, உள்ளத்தின் அடிப்படையில் ஆதரவு தரும் ஒரு சிலரில் நாசரும் ஒருவர். அரசியல் தனித்தன்மையும், கூட்டுச்சேராக் கொள்கையும் இவரது அரசியலின் வெளிநாட்டுக் கொள்கைகள் என்ற வகையில் இன்று இவர் உலக மக்கள் அனைவராலும் விரும்பிப் போற்றப்படுகிறார். ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் வெளிநாடுகளின் ஆதிக்கத்திலிருந்தும், அடிமைத்தளைகளிலிருந்தும் விடுதலை பெற்று 'தனித்தன்மை'கொண்டு இயங்கவேண்டும் என்பது இவரது அடிப்படை எண்ணம். அதை மேலும் வலிவாக்கி அதற்கான வழிவகைகளைக் காண்பதற்கே இந்தச் சுற்றுப்பயணத்தைமேற்கொண்டிருக்கிறார் என்பது சிலரது கருத்தாக உள்ளது.

1955-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஒருநாள் டில்லி பாலம் விமான நிலையத்தில் வந்திறங்கிய நாசர் இப்போது மீண்டும் இந்தியத் துணைக்கண்டத்துக்கு வருகை தந்துள்ளார். அவரது சுற்றுப்பயணத்தில் தமிழகமும் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டிருக்கிறது. தேசிய அடிப்படையில் ஐக்கிய அரபுக் குடியரசு கண்ட அந்த தலைவரைத் தமிழகம் முழுமனதுடன் வரவேற்கிறது!

**அஸ்வான் அணை உயர்ந்து வெற்றிபெற்று வருவதுபோல் அவரது முயற்சிகள் வெற்றி பெறுக, ஆதிக்க உணர்ச்சிகளின், அடிமை மனப்பான்மையின் முழு எதிரியாய் நீடித்து நிலைக்க இருக்கும் சூயசுக் கால்வாய்போல் அவரது பெயரும் நீடித்து நிலைத்திருக்க என, நாமும் அவரை உளங்கனிய வாழ்த்துகிறோம்!!**

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

"துப்பாக்கிப் பிரயோகம் எனக்கு மற்றொரு இரண்டாவது உலகப்போரைத்தான் நினைவு படுத்தியது" என்ற ஒரு போலீசுக்காரரின் கூற்றும், "நாங்கள் எவ்வளவு பேரை எத்தனை முறை சுட்டோம் என்றே தெரியவில்லை. அவர்கள் செய்த காரியத்துக்கு இது தேவைதான்" என்ற வேறொருபோலீசுஉயர்தர அதிகாரியின் நிறவெறி கொண்ட பேச்சும், "முகங்களை அடையாளம் கண்டுகொள்ளப் பிணக்குவியல்களை புரட்டிப்பார்க்கவேண்டியிருந்தது", "சாலைகளில் நடக்க முடியாதபடி மனிதப் பிணங்கள் பாதைகளை மூடியிருந்தன" என்பன போன்ற பத்திரிகை நிருபர்களின் செய்தியும், லங்கா, ஷார்ப்வெல்லி, ஜோஹன்ஸ் பர்க் முதலான இடங்களில் நிகழ்ந்திருக்கும் அடக்குமுறைச் செயல்களைப் பலப்படுத்திக் காட்டுகின்றன.

மனித உணர்ச்சிகளும், அறநெறியும்தான் இவ்வாறு தென் ஆப்பிரிக்காவில் நிறவெறி ஆட்சியால் குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கிறது என்றால், அரசியல் நாகரிகமும் அந்நாட்டுக்குடிமக்களுடனேயே கொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் மூன்று மாத காலத்துக்குத் தென் ஆப்பிரிக்காவில் எந்த விதமான அரசியல் கட்சிக் கூட்டங்களோ, போராட்டங்களோ நடத்தக் கூடாது என்று தடைச் சட்டம் வேறு விதித்துவிட்டார் பிரதமர் வெர்வோர்ட்.

இதற்கிடையில், போராட்டத் திட்டங்கள் அளவில் மாறுபட்டிருந்த ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் என்ற விடுதலை அமைப்பும் அமைதிப் போராட்டத்தில் தன்னைத் தானே ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. ஆப்பிரிக்க விடுதலைக் கட்சிகளுக்குள்ள அரசியல் நாகரிக உணர்ச்சிகள்கூட ஆளும் ஆதிக்கக் கட்சிக்கு இல்லை என்பதைத்தான் "எனது அரசாங்கம் இனக் கொள்கை பாகுபாடுகளை எதற்காகவும் மாற்றிக்கொள்ளப் போவதில்லை" என்ற பிரதமர் வெர்வோர்டின் மனித நாகரிகமற்ற அறிவிப்புக் காட்டுகிறது.

தென் ஆப்பிரிக்காவில் நிகழ்ந்திருக்கும் வெறி ஆட்சியின் விளைவுகள் உலக நாடுகள் கவனம் அனைத்தையும் கவர்ந்திருக்கிறது. குறிப்பாக இங்கிலாந்து பாராளுமன்றத்தில்தான் இதன் பிரதிபலிப்பு அதிகமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. மனித சக்திகளின் அநுதாபங்கள் அனைத்தையும் பெற்றிருக்கும் இந்த விடுதலைப் போராட்டம் இன்று ஒரு உலகப் பிரச்சினையாக எல்லோரையும் கவர்ந்திருக்கிறது. காரணம் இது ஒரு அரசியல் விடுதலைப் போராட்டம் மட்டுமல்லாமல், மனித தத்துவத்தை நிலைநிறுத்துவதற்காக முயலும் ஒரு போராட்டமாகவும் இருப்பதுதான்.

இந்த உண்மையைத் தெரிந்தோ தெரியாமலோ நினைவிற் கொள்ளாமல்தான் ஐக்கிய நாடுகள் சபையும் காமன்வெல்த் சபையும் 'இது ஆப்பிரிக்காவின் உள்நாட்டு விவகாரம்' என்ற ஒரு புதிய வேண்டாத குழப்ப உணர்ச்சியைக் கிளப்பியிருக்கின்றன. பிரதமர் நேரு மக்கள் சபையில் இந்தப் பிரச்சினையின் மீது பேசும்போது குறிப்பிட்டிருப்பதுபோல, இது உலக மனித உணர்வையே தட்டி எழுப்பியிருக்கும் நிகழ்ச்சி. உலக சரித்திரத்தின் ஓட்டத்தில் இது ஒரு சிறப்பு அம்சம்! மனித வாழ்வின் அடிப்படை உரிமைகளைப் பற்றிய இப்பிரச்சினையில் அரசியல் பாகுபாடுகளையும் நாடுகளின் வேறுபாட்டையும் உண்டாக்கிச் சிக்கல்கள் ஏற்படுத்துவதில்பொருளே இல்லை. மனித உரிமைக்காகப் போராடும் ஒரு சிறு மனித கூட்டத்துக்கு உலக மனித இனம் ஆதரவு காட்டி வெற்றி தேடித்தராமல், அரசியல், நாடு என்ற வேறு பாட்டினைக் காட்டி எட்டி நின்று உதட்டளவில் அனுதாபத்தை மட்டுமே தெரிவிப்பது மனிதாபிமானத்தைக் காப்பாற்றிய செயலாகாது. "நாங்கள் உங்களை இந்த நாட்டினின்றும் அடித்து வெளியே துரத்த விரும்பவில்லை, ஆனால் அதே போது உங்கள் சகோதரிகளையெல்லாம் மணந்துகொண்டு நமக்குள் உறவு முறைகளையும் வளர்த்துக்கொள்ளவும் வேட்கைப்படவில்லை. நாங்கள் கேட்பதெல்லாம் **எங்கள் நாடு எங்களுக்கு, எங்கள் நாட்டில் எங்களுக்கு உரிமை** என்பதுதான். விடுதலைக்குப் போராடும் ஆப்பிரிக்கர்களின் முன்னாள் தலைவர் ஆல்பெர்ட் லுதுலி என்பாரின் சொற்களில் தெரியும் அரசியல் நாகரிகத்தையும் மனிதப் பண்பையும் கண்ட பின்னராவது உலகின் கண்களுக்கு ஆப்பிரிக்க மனித உரிமைப் போராட்டத்தின் உண்மை உருவம் தெரியவேண்டும்.

இந்தப் பிரச்சினைக்குப் பெரும் பொறுப்பேற்று முடிவு காண வேண்டியது காமன்வெல்த் நாடுகள் சபை. ஆப்பிரிக்கா, ஐ. நா. சபையில் ஒரு அங்கம் என்பதைவிடக் காமன்வெல்த் சபையின் ஒரு உறுப்பு என்ற உண்மை, இந்த பிரச்சினைக்கு ஒரு முடிவு காண்பதில், வலிவுள்ளதாயிருக்கும். சமீபத்தில்தான் டில்லிப் பாராளுமன்றத்தில் சோஷிலிஸ்ட் உறுப்பினர் ஒருவரால் காமன்வெல்த் கூட்டுறவின் பயனற்ற தன்மை எடுத்துக் காட்டப்பட்டு விவாதிக்கப்பட்டது. அதை நிரூபித்துக் காட்டிக்கொள்வதுபோல் உள்ளது சமீபத்தில் ஆப்பிரிக்காவில் நிகழ்ந்திருக்கும் விளைவுகளும், இங்கிலாந்து இந்தப் பிரச்சினையில் இதுநாள் வரையில் ஒரு முடிவு காண்பதில் காட்டும் சிரத்தையின்மையும். வருகிற மேத் திங்களில் காமன்வெல்த் நாடுகள் சபைக்கூட்டம் கூட இருக்கிறது. அதில் கலந்துகொள்ளும் நாடுகளின் பிரதமர்களெல்லாம் டாக்டர் வெர்வோர்டின் இரத்தக் கறை படிந்த கைகளோடு கை குலுக்கப் போகின்றனர். இந்த நேரமும் தென் ஆப்பிரிக்கப் பிரதமரின் இரத்தக் கறைபடிந்த கைகளையும், ஆதிக்க, நிறவெறிகொண்ட அவரது இதயத்தையும் மாற்றியமைத்து அனுப்புவதில் தவறுவார்களானால் 'காமன்வெல்த் அமைப்பு, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய உணர்வை நீடித்துக்கொள்ள விரும்பும் ஒரு ஆடம்பர, பொழுது போக்கு அமைப்பு' என்ற ஒரு எண்ணத்தை மேன்மேலும் வலிவுபடுத்தியவர்களாகத்தான் ஆவார்கள். இன ஒதுக்கல் பிரச்சினைக்கு முடிவு காண்பதில் 'அது உள்நாட்டின் உள்விவகாரம்' என்ற வேறுபாட்டை ஏற்படுத்தித் தப்பித்துக் கொள்ள முயலுவார்களானால் மனிதத் தத்துவத்துக்குத் துரோகமிழைத்தவர்களாகத்தான் கருதப்படுவார்கள்.

ஐ. நா. சபையும், ஆயுதக் குறைப்புப் பிரச்சினைக்கு அடுத்தபடியாக இதற்கு ஒரு முக்கியத்துவம் அளித்து ஒரு நீடித்த முடிவு காண்பதில் பொருளிருக்கிறது. காமன்வெல்த் சபையானாலும் ஐக்கிய நாடுகள் சபையானாலும் இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்கும்போது தவிர்க்கவேண்டியது "உள்நாட்டு விவகாரம்" என்ற அரசியல் பின்னணி.

கைக்கொள்ளவேண்டியது "மனித உரிமை" என்ற பொது உணர்வு.

★

கற்பனை நாடகம்

# நந்தாவும் நாவுக்கரசும்!

இடம்:- சென்னையில் ஒரு உயர்நிலைப் பள்ளி.

இருப்போர்:- நாவுக்கரசர், நந்தாலால்.

**நிலைமை விளக்கம்:**

[நந்தாலால் சௌகார்பேட்டை வாசி. நாவுக்கரசர் சைதாபேட்டை வாசி. இருவரும் ஒரே பள்ளியில் ஆசிரியர் பணியாற்றுபவர்கள். நந்தாலால் இந்திப் பண்டிதர். நாவுக்கரசர் தமிழ்ப் புலவர். இருவரும் வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவராயினும், நட்புக்கொண்டவர்கள். மொழிப் பிரச்சினை குறித்து அடிக்கடி இவர்கள் உரையாடுவதுண்டு.]

நந்தாலால்:- நமஸ்தே பண்டிட்ஜி! நமஸ்தே!

நாவுக்கரசு:- வணக்கம் இந்தி ஐயா! வணக்கம்!

லால்:- தும் கித்னா அச்சா போலோ ஹை! தும்ஹாரா பாஷா கித்னா அச்சா சுந்தர் ஹை!

அரசு:- ஐயா இந்திப் பண்டிதரே! சும்மா தமிழிலேயே பேசுங்க... உங்க வண்டிக்காரன் மொழி ஒன்றும் புரிய மாட்டேங்குது!

லால்:- தமிழய்யா! ஒன்றும் தப்பா எண்ணாதிங்க... நீங்க எத்தனை அழகாத் தமிழ்ப் பேசுறிங்க... உங்கள் தமிழ்மொழி எத்தனை அழகான மொழின்னுதான் சொன்னேன். அதுசரி! எங்கள் இந்தி அன்னையை ஏன் வண்டிக்காரன் மொழின்னு கேவலமாச் சொல்றிங்க...

அரசு:- ஒவ்வொரு மனிதனுக்கும் தன்மொழி பெற்ற தாயைப் போன்றது. உங்கள் இந்தி மொழியைக் கேவலப்படுத்துவதற்காக வண்டிக்காரன் மொழி என்று சொல்லவில்லை! எங்கள் பக்கத்தில் வண்டி ஓட்டினால் ஹை... ஹை... என்று மாட்டை விரட்டுவார்கள். உங்கள் மொழியின் வாக்கியங்கள் பெரும்பாலும் ஹையில்தானே முற்றுப் பெறுகின்றன. அதனால்தான் உங்கள்மொழியைவண்டிக்காரன் மொழி என்று சொன்னேன்.

லால்:- ஹை... என்ற ஒலி உங்களுக்கு என்னவோ கிள்ளுக்கிரையாகப்படுகிறது. உங்கள் முதல் மந்திரியும்; நிதிமந்திரியும் ஹை... என்ற ஒலியை கேட்டவுடனே எப்படி நடுங்குகிறார்கள் தெரியுமா? "தும் பைட்டோ ஹை"

❊ நா. ஆர்வி ❊

என்று எங்கள் நேரு சொன்னால் உட்காருவார் உங்கள்முதலமைச்சர் 'பைசா நஹீ... தும் ஜாத்தா ஹை" என்று எங்கள் மொரார்ஜி சொன்னால், சொல்லாமல்கிளம்பி விடுவார் உங்கள் நிதி அமைச்சர்.

அரசு:- நேரு சொன்னால் உட்காரலாம் எங்கள் முதல்வர். மொரார்ஜி இல்லை என்றால், சொல்லாமல் கிளம்பலாம் எங்கள் நிதி அமைச்சர், சொன்னவர்கள் எஜமானவர்கள்! கேட்டவர்கள் சீடர்கள்! ஆனால்—உங்கள் 'ஹை'க்கு அஞ்சமாட்டார்கள் தமிழ் மக்கள்! ஹை... என்றால் தும் ஜாவ் ஹை... என்பார்கள் திருப்பி! "நான்சென்ஸ்" என்று உங்கள் நேரு செப்பியதற்குச் சென்னையில்தமிழ்மக்கள் வகுத்த அணிவகுப்பை மறந்திருக்கமாட்டீர்கள்! சந்தேகமிருந்தால் கேட்டுப்பாருங்கள் உங்கள் சாச்சாவிடம்!

லால்:- தமிழய்யா! நீங்கள் வேண்டுமானால் இந்திக்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம்! உங்கள் கட்சி வேண்டுமானால் கிளர்ச்சி நடத்தலாம்! ஆனால்—இந்த இராஜ்ய அரசாங்கம் இந்திக்கு ஆதரவு தருகிறது. அமைச்சர்கள் இந்திக்கு வரவேற்புக் கொடுக்கிறார்கள்! "குருடனும் கைவிளக்கும்" என்று சட்டமன்றத்தில் உங்கள் நிதி அமைச்சர் கூறிய குட்டிக் கதையின் தத்துவமே இந்த அமைச்சரவை இந்திமீது வைத்துள்ள பாசத்தைத் தெளிவாகக் காட்டுகிறது!

அரசு:- இதில் ஒன்றும் வியப்பு இல்லையே! மேலிடம் சொல்கிறது "இந்தி..." என்று! கூவுகிறார்கள் இவர்கள் ஜிந்தாபாத் ...என்று! ஆனால் தமிழர்கள் 'இந்தி' என்றால் 'ஒழிக' என்பார்கள்!

லால்:- இம் மாநில அரசு ஜிந்தாபாத் சொன்னால், அது தமிழர்களே வாழ்க என்று சொன்னதாகத்தான் பொருள்!

அரசு:- பண்டிட்ஜி நந்தா அவர்களே! உங்களைப் பாராட்டத்தான் வேண்டும்! குரல் கொடுத்தது உங்கள் வடக்கு! வாயசைத்தது எங்கள் அமைச்சு! குடிகளல்ல! மக்களுக்காக அமைச்சு என்பர். இங்கு அமைச்சர்களுக்காக மக்கள் இழுத்துச் செல்லப்படுகின்றனர். "இந்த மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயர் வை" என்று சொல்லாத நாக்கு இல்லை! கேட்காத தலைவர்கள் இல்லை! பேசாத மேடை இல்லை! மக்களுக்காக அரசு இருந்திருக்குமேயானால் எப்பொழுதோ தமிழ்நாடு என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்! அப்படி இருக்க அமைச்சு ஜிந்தாபாத் சொ[illegible]

ஞல் அது தமிழ் மக்கள் வாழ்க் என்று சொன்னதாக எப்படிப் பொருள் கொள்ளமுடியும்!

**லால்:-** எது எப்படி இருந்தால் என்ன! உரிமையும் செல்வாக்கும் இந்திக்குத்தான்! அரியணை ஏறப்போவது இந்தி அன்னை தான்!

அரசு:- அரியணை ஏறும்பொழுது பார்த்துக்கொள்வோம்! இப்பொழுது இந்த நாட்டின் பொது மொழி என்ற 'இடம்' ஆங்கிலத்திற்குத்தான். இந்திக்குக் கிடையாது அந்த உரிமையும், பெருமையும்!

**லால்:-** நாவுக்கரசுஜி! நீங்கள் என்னவோ ஆங்கிலம்தான் இந்தியாவின் பொதுமொழி என்று பெருமைப்படுகிறீர்கள்! ஆங்கிலம் இந்த நாட்டின் மொழியே அல்ல—இந்த நாட்டின் மொழிகளின் பட்டியலில் இடம் பெறக் கூடாது என்று தீர்மானமே போட்டுவிட்டோம் பாராளுமன்றத்தில்!

அரசு:- பாராளுமன்றத்தில் தீர்மானம் போட்டுவிட்டதினல் ஆங்கிலத்தையே ஒழித்துவிட்டோம் என்று தப்புக் கணக்குப் போடாதீர்கள்! இந்த நாட்டு மக்கள் உள்ளத்திலிருந்து ஆங்கிலத்தை ஒரு நாளும் வெளியேற்றிவிடமுடியாது! ஆங்கிலம் தான் இந்தத் துணைகண்டத்திற்குத்தேவையான ஒரு பொது மொழி என்று நல்லோர்எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது!

**லால்:-** ஆங்கிலத்தை அரியணையிலிருந்து வீழ்த்தி, இந்திக்கு அதில் இடம் பிடிப்பதில் உங்களுக்கேன் பொருமை! ஆங்கிலத்தின் மீது உங்களுக்கேன் இத்தனை பாசமும் பற்றும்!

அரசு:- ஆங்கிலத்தின் மீது பாசமுமல்ல, பற்றுமல்ல! ஆங்கிலமும் தமிழ்மொழியை ஊறு செய்த மொழிதான்! என்ருலும்—ஆங்கிலத்தின் தன்மையும், பண்பும் வேறுதான்! அறிவு வளர்ச்சிக்கு பயன்படுகிறது ஆங்கிலம். உலகோடு தொடர்பு கொள்ளத் துணைபுரிகிறது ஆங்கிலம். ஷேக்ஸ்பியரையும்; ஷெல்லியையும் வால்டேரையும்; ரூசோவையும்; ஷாவையும் இன்னபிற அறிஞர்களையும் தெரிந்து கொள்ள முடிகிறது ஆங்கிலத்தினல்! இந்தியாவின் கதை அப்படி அல்லவே! அதன் கதையே வேருச்சே!

லால்:- என்ன கண்டுவிட்டீர்கள் இந்தியின் கதையில்?

அரசு:- இந்தியின் பிறப்பு என்ன? அதனைப் பேசுபவரின் கலாச்சாரம் எப்படி? அதன் சரித்திரப் பின்னணி எப்படிப்பட்டது? அதன் இலக்கிய இலக்கணம் எத்தன்மை வாய்ந்தது? அதன் பண்பு,அதன் இருதயம்; அதன் தரம்—யாது என்பதை விளக்கப் போந்தால்... வெட்கம்...! வெட்கம்...!!

லால்:- இந்தியைப்பற்றி ஆராய வந்துவிட்டீர்களே! உங்களவர்களே உங்கள் தமிழை மதிக்கவில்லையே! ஒரு மறைமலை தமிழை மெருகு கூட்டிஞர், தூய்மைப் படுத்திஞர் என்கிருர்கள். ஆனல் "அவர் எழுதிய தமிழும் ஒரு தமிழா" என்று கேள்வி எழுப்புகிருர் ஒரு தமிழர்! இப்படி இருக்கையில் இந்தியைப் பற்றி...!

அரசு:- லால்! உங்கள் பேச்சு நகைப்பைத்தான் உண்டாக்குகிறது! தமிழ்ப் பரம்பரையில் தோன்றிய எந்தத் தமிழ்மகனும் மறைமலையின் தமிழை இழிவு படுத்திப் பேசியிருக்கமாட்டார். பேசியிருந்தால்—பேசியவர் பரம்பரை வேருக இருக்கவேண்டும்! ஒரு தமிழ் மகன் மறைமலையின் தமிழை, "தமிழா" என்று கேட்டிருக்கமாட்டார். கேட்டிருந்தால்—கேட்டவர் தமிழ் மகனுக இருக்கமுடியாது.

லால்:- அப்படிப்பட்டவர் உங்கள் தமிழ் மொழியின் தயவிலேதான் வாழ்கிருர்! தமிழன் என்ற முத்திரையில்!

அரசு:- ஆம்! தமிழ் மண்ணிலே தான் வாழ்கிருர். அவர்மட்டுமல்ல! அவரைப் போன்றவர்கள் இத்தமிழ்த் தரணியில் ஏராளம்! அவர்கள் பேசுவதும் தமிழ் தான்! பிழைப்பதும் தமிழ்ப் பெயரைச்சொல்லித்தான்! நமஸ்காரம் என்றே பகர்ந்திடுவார். ஸ்ரீ என்றே எழுதிடுவார். அவர்கள்தான் தமிழ் எழுத்தாளர்! அவர்களைத்தான் தமிழ் மேதை என்று அரசாங்கம் பாராட்டும். ஆனல் தமிழை வளர்க்கும் நல்லவர்களாக இருக்கமுடியாது அவர்கள்! உங்கள் இந்தியை ஆரத்தி சுற்றி அரியணை ஏற்ற வழி பார்த்திருக்கும் ஒற்றர்களாகத்தான் இருக்கமுடியும்!

லால்:- உங்கள் பச்சைத் தமிழர் அரசு இருக்கும் பொழுது உங்களுக்கு ஏன் கவலை?

அரசு:- எங்கள் அரசு பச்சைத் தமிழர் அரசாக இல்லை! பதவி என்ற மது அருந்திய அரசாக இருக்கிறது. மயங்கிக்கிடக்கிறது போதையில்! அதனல் எப்படிக் காக்கமுடியும் தமிழை!

லால்:- தமிழய்யா! சொல்கிறேனே என்று தவருக எண்ணதீர்கள்! எப்பொழுதும் தமிழர்கள் குறை சொல்பவர்களாகவேஇருக்கிருர்கள்! உங்கள் தமிழ்மொழி இந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாக அரியணை ஏற்றிப் பெருமைப் படுத்தி இருக்கிறது உங்கள் பச்சைத்தமிழர் அரசு! இதைவிட வேறு என்னவேண்டும்!

அரசு:- தேர்தல் வந்தது! தமிழ் மொழியை அரியணை ஏற்றிவிட்டோம் என்று பிரகடனப் படுத்திஞர்கள்! தமிழ் வளர்ச்சிக்காக தமிழ் மீது பாசம்கொண்டு தமிழை 'அரியணை' ஏற்றவில்லை இவர்கள்! அவர்கள் வாழ்வுக்காக, அவர்கள் பதவி நிலைப்பதற்காக—இப்படி ஒரு ஆசை வார்த்தையினை வைத்தார்கள் மக்கள் முன்னே! தமிழை ஆட்சி மொழியாக ஆக்கிவிட்டோம் என்று அறிவித்து ஆண்டு ஐந்து வரப்போகிறது! இதுவரை அவர்கள் தமிழை வளர்த்தது என்ன? 'திரு' என்ற சொல்லை தி. மு. கழகம் சென்னை நகரமன்றத்தில் கொண்டு வந்த நேரத்தில், அரசைச் சார்ந்த குழு எதிர்ப்பைத் தெரிவித்தது! 'தமிழ் நாடு' என்று பெயர் வை என்று ஏழெட்டு அமைச்சர்களைத் தவிர ஏனைய தமிழர் அனைவரும் ஒருமித்து எழுப்பினர் குரல்! அனைத்தும்செவிடன் காதில் ஊதிய சங்கே! இப்படிப் பட்டவர்களா தமிழை வளர்ப்பவர்கள்? தமிழ்மொழி உள்ளபடியே அரியணை ஏறியிருக்குமேயானல்—

ஸ்ரீ—திருவாக,

ஹோட்டல்—உணவு விடுதியாக,

போலீஸ் ஸ்டேஷன்—காவல் நிலையமாக,

ஆகாஷ்வாணி — வானெலியாக,

டெலிபோன் — தொலைபேசி யாக,

—மற்றும் இதுபோன்று ஏனைய சொற்கள் அனைத்தும் தமிழிலே வழங்கியிருக்க அரசு காரிய மாற்றி இருக்கவேண்டும்! அப் பொழுதுதான் தமிழ்மொழி ஆட்சிபுரிகிறது என்றுபொருள்!

லால்:- அரசுஜி! இது என்ன அலா வுதீன் விளக்கா? நினைத்தவுடன் எதுவும் நடக்க! இதுபோன்ற மாற்றங்கள் ஏற்படச் சிறிது காலம்தான் பிடிக்கும்!

அரசு:- உண்மை; மறுக்கவில்லை! ஐந்து ஆண்டுகளல்ல! ஐம்பது ஆண்டுகள் சென்றாலும்கூட இவர் களால் தமிழை வளர்க்க முடி யாது! தமிழை வளர்க்க, தமிழ் மீது பாசம் வேண்டும்! தமிழ் அறிவு வேண்டும்! தமிழ்ச்சுவை தெரிந்திருக்கவேண்டும்! அடுக்கு மொழி என்றால் தூக்கு என்ன விலை என்று கேட்பவர்களா தமிழை வளர்க்கமுடியும்!

தமிழ்மொழியை அரியணை ஏற்றிவிட்டோம் என்று கூறி, இந்தியாளின் கடை விழியிலே மயங்கிவிட்டார்கள்! டால்டா நெய் பூசி; காட்டுக் கனகாம்பரம் சூடி; நைலான் சேலை அணிந்து; அங்கங்காட்டி; ஆசைமொழி கூறி; பதவி என்ற பொடி போட்டு மயக்கிவிட்டாள் உங்கள் இந்திப் பெண்! மயங்கிக் கிடக்கி றார்கள். இதில் என்றும் தீரா மயக்கம் கொண்டவர் எங்கள் தென்னாட்டுக் காந்தி சர்தார் அவர்கள்! பன்னீர் தெளித்து வரவேற்கிறார்கள் இந்திப் பெண்ணை! இப்படிப்பட்டவர் களின் கதையின் முடிவை நாங் கள் நன்கு அறிவோம்! சொல்ல வேண்டியதில்லை! அனுபவப் பட்டவள் தங்கள் இந்தியாள்! தெரிந்திருப்பீர்கள் தாங்கள்!

லால்:- எதைச் சொல்கிறீர்கள்?

அரசு:- உங்கள் இந்தியாவின் மாஜிக் காதலரைத்தான்! அதான்......! அந்தக் குட்டிக் கதைக்காரர்...!

லால்:- ஓ...! அவரையா...! புரிந்து கொண்டேன்! அப்போது கண்ணே, கரும்பே என்று கொஞ்சியவர்தான்! எங்கள் இந்தி அன்னை இவரை வைத் துக் கொண்டால் ஆபத்து என்று உணர்ந்தாள்! வெறுத் தாள்! விரட்டப்பட்டார்! இப் போது வில்லனாக மாறிவிட்டார்! இதில் ஒன்றும் வியப்பு இல் லையே!

அரசு:- வியப்புக்காக அல்ல சொல் வது! ஒரு முறை உங்கள் இந் தியை இந்த மண்ணிலே திணிக் கத் திட்டமிட்டவர் இவர்! அப் போது சேதி கேட்ட தமிழ்க்குடி ஒன்று திரண்டது! களம்நோக்கி அணிவகுத்தது! தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!! என்ற முழக்கம் விண்ணை முட்டியது! அரசு துப்பாக்கியைக் காட்டியது! ஓடி யவர்களை விரட்டி விரட்டி அடித் தது! பலியானார் சிலர்! கொட் டடியில் அடைபட்டனர் பலர்! இரத்தம் சிந்தியவர் ஏராளம்! தாய்மார்கள் பலர் தாலி இழந்த னர், பூவிழந்தனர்! தாலமுத்து நடராசன் கல்லறைமுன் போய் நின்றால் கதைசொல்லும் இன்றும்!

லால்:- பழைய கதைகள் இப் பொழுது ஏன்? அப்பொழுது உள்ள நிலைமை வேறு! அப் பொழுது ஆண்ட அரசு அந்நியர் அரசு! அது ஆங்கில அரசு! இப்பொழுது ஆளும் அரசு இந் தியர் அரசு! இது இந்தி அரசு! எனவே இந்திதான் பாரதத் தின் பொதுமொழி! எங்கள் இந்தி தமிழகத்தில் புயல்வேகத் தில் பரவத் தொடங்கிவிட்டது! நாணயத்தில், அஞ்சல் அட்டை யில்; செய்திப் படத்தில்; மைல் கல்லில்; மணியார்டர் பாரத்தில் என இந்தி புதுப்புது இடங் களைப் பிடித்து வருகிறாள். சிறப் புத் தமிழ் என்ற பகுதி இருந்த இடத்தை, இந்திக்கு ஒதுக்கி யாகி விட்டது! தமிழகமெங்கும் இலவச இந்தி வித்தியாலங்கள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன! இந்தி தெரிந்தவருக்கு உத்தியோகத் தில் சலுகை காட்டப்படுகிறது. இன்னும் பத்து ஆண்டுக்காலத் திற்குள் இந்தி அன்னை சுதந்திர பாரதத்தின் அரியணையில் வீற் றிருக்கப் போகிறாள்!

அரசு:- லால்! எத்தனை மனக் கோட்டைகள் கட்டுகிறீர்கள்! தங்கள் மொழி வளர்ந்து வரு வது கண்டு எத்தனை பூரிப்பு அடைகிறீர்கள்! தமிழன்மீது இந்தியைத் திணிப்பதிலே தாங் கள் மகிழ்ச்சி கொண்டால், தமிழ்மொழியின் வீழ்ச்சி கண்டு எழுச்சி கொள்ளும் தமிழர்களை மறந்துவிடாதீர்கள்! அவர்கள் தொகை வளர்கிறது! அவர்கள் மூச்சு, பெருமூச்சாகிவிடும்! தாங்க முடியாது உங்களால்! பத்து ஆண்டுகள்! கெடு வைக் கிறீர்களா கெடு! அந்த நாளைத் தான் நாங்கள் எதிர்பார்க் கிறோம்!

லால்:- என்ன செய்யமுடியும் உங் களால்!

அரசு:- வீரத்தின் இருப்பிடம் தமிழினம்' போர் என்றால் தோள் தட்டிய இனம்! வேல் என்றால் மார்பு காட்டிய இனம்! எங்கள் தமிழ் இனம்!! உங்கள் இந்தி, இந்தத் தமிழ் மண்ணில் கட்டாயமாகத் திணிக்கப்படுமே யானால்—அன்றே துவங்கும் அறப்போர்!

தொழிலாளர் படை!
இயக்கப் படை!
மாணவர் படை!
புலவர் படை!
மாதர் படை!
பாவலர் படை!
ஆசிரியர் படை!

என ஆயிரம் படைகள் அணி வகுக்கும்! தமிழர் படை நடை பயிலும் அறக்களத்தில்!

இந்த முறை இந்தியை விரட்டுவதாக மட்டும் அமை யாது! எல்லைக்கோடு நிறுவப் படும் திராவிட இனங்களுக்கு! பழைய பரம்பரைகள் மீண்டும் கூடும்!

"கன்னடமும் களிதெலுங்கும்
கவின் மலையாளம் துளுவும்
உன் உதிரத்தேஎழுந்து..."

என்ற பாவிற்குச் சொந்தம் கூட்டும்!

லால்:- அறப்போர்! எழுச்சி என்ற சொற்களைக் காட்டி எங் களை ஒன்றும் மிரட்டிவிட முடி யாது! கேட்டுக்கேட்டுப் பழக்கப் பட்ட வார்த்தைகள்! உங்கள் சேதி தெரிந்துதான் தென்னாட் டில் இப்பொழுதே படைகள் நிறுவி வருகிறோம்! படை களைக் குவிக்கிறோம்! தூத்துக் குடியில் கப்பற்படை! சென்னை யில் விமானப்படை! ஆந்திரா வில் குதிரைப்படை! மலபாரில் போலீஸ்படை! இப்படை களுக்குமுன் உங்கள் இயக்கங் கள்; அறப்போர்; எழுச்சி; எல் லாம் தூள்! தூள்!!

அரசு:- போலீஸ்படை! கப்பற் படை! விமானப்படை! குதி ரைப்படை! இவ்வளவுதானா? இன்னுமிருக்கிறதா?

லால்:- இதற்குப் பதில் சொல் லுங்கள் முதலில்........!

அரசு:- பதில் சொல்கிறேன் கேள்! படைகளைக் காட்டி, பீரங்கியைக்காட்டி ஆர்ப்பரித்த அதிகார வெறியர்களின் இறுதிப் பயணம் எப்படிப்பட்டதென்பதை ஏடுகளில் படித்துத் தெரிந்தவர்கள் நாங்கள்!

கிளர்ந்தெழுந்த பிரஞ்சு மக்கள் முன் பீரங்கியைத் திருப்பினான் லூயி மன்னன்! பீரங்கியைக் காட்டியவன் கல்லறைக்கு அனுப்பப்பட்டான்!

"தங்கள் சொந்த மொழியாம்! என்னவேண்டியிருக்கிறது இதுகளுக்கு தம்மொழி! எம்மொழியே அரசோச்சும் இந்த அயர் நாட்டை!" என்று கொக்கரித்தது அயர்லாந்து நாட்டைப் பார்த்துப் பிரிட்டிஷ் அரசு! "அறப்போர்" என்றனர் மக்கள்! 'துப்பாக்கி சிறை' என்று மிரட்டியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்!

முடிவு?

அயர்மக்கள் விடுதலை பெற்றனர். அயர்மொழி அரசோச்சுகிறது இன்று!

நாடு காடாயிற்று! பசி பட்டினி என்றனர் மக்கள்! வரியைக் கொடு எங்களுக்கு என்றான் சார் மன்னன்! மக்கள் தொடுத்தனர் அறப்போர்! மன்னனிடம் சென்றனர். வரியா வேண்டும்? இதோ என்றனர் மக்கள்! கேட்டவன் தலை மண்ணில் உருண்டது!

லால்ஜி அவர்களே! படைகள் முன்னால்; பீரங்கியின் முன்னால்; அதிகார வர்க்கத்தின் முன்னால் அணிவகுத்த படைகள்தான் இவை! அறப்போர்தான் நடத்தினர்! மக்கள் சக்தி ஒன்று திரண்டால் அதற்குப் பெயர் வெற்றி! வெற்றி!! வெற்றி!!! என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்! உங்கள் இந்தி தமிழகத்தில் புகுந்தால் — மக்கள் சக்தி ஒன்று கூடும்! வெற்றி கிட்டும்!! வீழ்ந்த தமிழ்க்குடி மறுமலர்ச்சி அடையும்! தமிழ் ஆட்சி புரியும்! உங்கள் இந்தித் திணிப்பின் மூலம் நாங்கள் இந்த வாய்ப்பை நோக்குகிறோம்!

லால்:- அரசுஜி! உங்களிடம் உரையாடி மீளமுடியாது! வகுப்பிற்கு நேரமாகிவிட்டது! நான் வருகிறேன்! நமஸ்தே!

அரசு:- வணக்கம்.........!

*

# பண்பின் வடிவான மலர்க்கொடி

—(மாத்தூரான்)—

மாடியில் உட்கார்ந்து "ஷேக்ஸ்பிய"ரைப் புரட்டிக்கொண்டிருந்த செல்வன் புத்தகத்தை மூடிவிட்டு நிமிர்ந்தான். எதிரே சுவரில் தொங்கிய காலண்டர் "டிசம்பர்—27" என்ற கொட்டை எழுத்துக்களைக் காட்டித் திரு திரு வென்று விழித்துக்கொண்டிருந்தது.

செல்வன் மனம் ஒரு துள்ளுத் துள்ளியது.

"அடா! கிருஸ்துமஸ் விடுமுறை எவ்வளவு வேகமாக முடிந்து வருகிறது! அப்படியென்றால் கல்லூரி திறக்க இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறதா?" அவன் வியப்பு அடங்கவில்லை. அதற்குள்—

"செல்வா! தம்பி......செல்வா!"

கீழேயிருந்த புனிதவதி அம்மாள் மகனை உரத்த குரலில் அழைத்தார்கள்.

"இதோ வந்துவிட்டேனம்மா..!" என்றவாறு மாடிப்படி வழியாக வேகமாக இறங்கி வந்தான் செல்வன்.

மகனை வைத்த கண் வாங்காது கூர்ந்து நோக்கிய புனிதவதியம்மாளுக்குப்பெருமை பிடிபடவில்லை. "செல்வன் எத்தனை அழகாக வளர்ந்துவிட்டான்?" பூரிப்பு அந்தத் தாயுள்ளத்தில் பொங்கி வழிந்தது.

"ஏனம்மா...கூப்பிட்டீர்களா...?"

"ஆமாண்டா! மணி ஒன்பதாகி விட்டது. இந்த நேரத்தில் என்ன படிப்பு வேண்டிக்கிடக்கிறது. போ ...உனக்காக மலர்க்கொடி இன்னும் சாப்பிடாமல் காத்திருக்கிறாள்!"

செல்வன் சாப்பிடும் அறையில் போய் அமர்ந்தான். மலர்க்கொடி ஆவிபறக்கும் தோசையைத் தட்டில் கொண்டுவந்து வைத்தாள்.

"ஏன் மலர்க்கொடி...நீ இன்னும் சாப்பிடவில்லையா?"

"ஊகும்!"

"ஏனாம்...?"

"உங்களுக்கு முந்தியா நான் சாப்பிடறது?"

"சுத்தக் கர்நாடகம்!"

வாய்விட்டுச் சிரித்தான் செல்வன். நாணத்தால் மெல்ல முறுவலித்தாள் மலர்க்கொடி.

சாப்பிட்டு முடிந்துவந்த செல்வன் மீண்டும் மாடிக்குப்போகத் திரும்பினான்.

"இங்கேவாப்பா செல்வா! உன்னிடம் கொஞ்சம் பேசவேண்டும்?" என்று அழைத்தார்கள், புனிதவதியம்மாள்.

"என்னம்மா, பேசப்போகிறீர்கள்?" என்றவாறு அம்மாவுக்கு எதிரில் அமர்ந்தான் செல்வன்.

"எல்லாம் உன் கல்யாண விஷயமாகத்தான். வருகிற சித்திரை மாதத்தோடு உன்படிப்பு முடிகிறது. வைகாசியில் நல்ல நாள் பார்த்து முகூர்த்தத்தை வைத்துவிடலாமென்று நினைக்கிறேன்."

"அதெற்கென்னம்மா.....செய்துவிட்டால் போச்சு!"

"என்னடா இது பட்டும் படாமலும் பேசுகிறாய்! எனக்கோ வயதாகிவிட்டது. காலாகாலத்தில் மலர்க்கொடியை இந்த வீட்டு மருமகளாக்கி வைத்துவிட்டால் என் கவலையெல்லாம் தீர்ந்தமாதிரி...!"

செல்வனின் இதயம் ஒரு முறை குலுங்கி நின்றது.

"நீங்க என்னம்மா சொல்லுறீங்க...?"

"மலர்க்கொடிக்கும் உனக்கும் கல்யாணம் என்கிறேன்"

"அம்மா...!"

செல்வனுக்கு நா எழவில்லை. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் கொஞ்சநேரம் திக்குமுக்காடிப்போனான்.

"என்னை மன்னியுங்கள் அம்மா! முன்பே ஒரு பெண்ணுக்கு வாக்குறுதிகொடுத்துவிட்டேன். அவளைத்தான் நான் திருமணம் செய்துகொள்ளப்போகிறேன. மலர்க்கொடியின் அழகுக்கும் குணத்துக்கும் ஏற்ற கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து, அவள் வாழ்வைப் பூத்துக் குலுங்கச் செய்யவேண்டியது என் கடமையம்மா!"

புனிதவதியம்மாள் சிலையானார்கள்......

"நான் சொல்லுவதைக் கேள் செல்வா! மலர்க்கொடி கண் கலங்கினல் நமக்கு நல்லதில்லை. உனக்காகவே அவள் இந்த உலகத்தில் பிறந்திருக்கிருள். அவளுக்கு எதிலே குறைச்சல்? பத்துவரை படித்து இருக்கிருள். தந்தச்சிலை போன்று இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தாலும் சலிப்புத்தட்டாத அழகு இருக்கிறது. வேறு என்னடா வேண்டும்?"

"மலர்க்கொடி எனக்குப் பிடிக்கவில்லையென்று நான் சொல்லவில்லையம்மா. சின்ன வயதுமுதல் இந்த வீட்டில் அவளும் நானும் ஒன்ருக வாழ்ந்துவந்ததாலோ, என்னவோ? மலர்க்கொடியை மனைவியாக்கிக்கொள்ளவேண்டுமென்ற உணர்வே எனக்குத் தோன்றவில்லை. அவள்பால் எனக்கிருக்கும் அன்பும் பாசமும் அளவிடற்கரியது. ஆனல் அந்த அனபின் முடிவு நீங்கள் நினைக்கும் விதத்தில்மட்டும் இல்லை. என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்!"

புனிதவதியம்மாளின் நீர்த்திரை படர்ந்த பார்வையில், மாடிப்படிகளின் வழியாக ஏறிச்செல்லும் செல்வன் உருவம், புகைபடிந்த ஓவியமாகத் தெரிந்தது. இனி மலர்க்கொடிக்கு என்ன பதில் சொல்லுவது?

மகனுக்கும் மாதாவுக்கும் நடந்த உரையாடலை இத்தனை நேரமும் அடுக்களையில் இருந்தவாறு கவனித்துக்கொண்டிருந்த மலர்க்கொடி கல்லாகச் சமைந்துநின்ருள். அவள் மெல்லிய உள்ளத்தில் வினடிநேரத்தில் மேகம் கவிந்தது. மின்னல் விளைந்தது. இடி இடித்தது. பேய்மழை கொட்டியது.

"அத்தான்....வேறொருத்திக்குச் சொந்தமா...?"

அந்தப் பேதையால் அதற்குமேல் நினைத்துப்பார்க்க முடியவில்லை. நெஞ்சே வெடித்துவிடும் போலிருந்தது. அவள் இதய அரங்கில் எழில்முகம் காட்டிக்கொண்டிருந்த செல்வனின் உருவத்தை, யாரோ ஒரு பெண் வலுக்கட்டாயமாகத் தூக்கிக்கொண்டு ஓடுவதைப் போன்ற ஒரு பிரமை! கண்களை இறுகமூடிக்கொண்டாள் மலர்க்கொடி. மூடியிருந்த கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்துகொண்டிருந்தது. இனி அவளுக்கு என்ன இருக்கிறது அந்தக்குடும்பத்தில்?

செல்வனின் அத்தை மகள் தான் மலர்க்கொடி, அதாவது அவனுக்கு அவள் முறைப்பெண்! பாவாடைப் பருவத்தில் பெற்றோர்களை இழந்துவிட்ட மலர்க்கொடியைப் புனிதவதியம்மாளின் அன்பும் பெருந்தன்மையும்தான் வளர்த்து ஆளாக்கிப் பத்தாவது வகுப்புவரை படிக்கவும் வைத்தது. அதுமட்டுமில்லை...பண்பின் திருவுருவாகத் திகழ்ந்த மலர்க்கொடியைச் செல்வனுக்குக் கல்யாணம் செய்துவைத்து, அந்தக் காட்சியைக் கண்குளிரப் பார்த்துவிட வேண்டுமென்று கனவுகண்டு வந்தார்கள் புனிதவதியம்மாள்.

கனவு கனவாகவே நின்றுவிட்டது. மலர்க்கொடி மட்டும என்ன?

செல்வனின் நினைவு அவள் உயிரோடு உணர்வோடு ஒன்றிக்கலந்திருந்தது. அவளுக்குத்தான் அவனிடம் எத்தனை அன்பு, பரிவு, கனிவு, மரியாதை. அப்படிப்பட்டவன் அவளை எட்டி உதைத்துத் தள்ளிவிட்டானே! என்ன செய்வது? இரவெல்லாம் இமையை மூடவில்லை. தன் நிலையை எண்ணியெண்ணிக் குமைந்து கண்ணீர் சிந்தினள் அந்த அபலை!

பொழுதுவிடிந்தது.

மணி பத்து இருக்கும். அப்போது—

"சார்...போஸ்ட்!" என்ற குரல் வெளியிலிருந்து கேட்டது.

உள்ளே அடுப்பில் வேலையாக இருந்த மலர்க்கொடி முகத்தைச் சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு வாசலுக்கு வந்தாள். அவள் முகவரியிட்ட கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டுச் சென்ருன் தபால்காரன்.

உறையைப் பிரித்தாள்.

மலர்க்கொடிக்கு ஒரே மகிழ்ச்சி வெள்ளம்!

கோயம்புத்தூர் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியில் அவள் வேலைபார்க்க வரும்படியான உத்தரவுதான் அது! மூன்று மாதங்களுக்கு முன்னல்மனுச்செய்திருந்தாள். வேலைக்கான பாரத்தைத் தன்கைப்படவே எழுதித் தபாலில் அனுப்பியவன் செல்வன்தான். புனிதவதியம்மாளுக்கு அவள் வேலைக்குப்போவதில் கொஞ்சமும் விருப்பமில்லை, முழுமூச்சாக எதிர்த்தார்கள். ஆனல் மலர்க்கொடியின் பிடிவாதம்தான் முடிவில் வெற்றி கண்டது.

அவள் மட்டும் அன்று பிடிவாதமாக இருந்திராவிட்டால்? அந்த வீட்டில் தினம் தினம் நெஞ்சம் வெந்து நெடுமூச்செறிந்துகொண்டிருக்க வேண்டியதுதான். நல்லவேளை, தாங்கமுடியாத துன்பத்திலும் இன்பத்தின் மெல்லிய சிறுகீற்றுப் புன்னகைத்தது. மலர்க்கொடிக்கு ஓரளவு நிம்மதி!

புனிதவதியம்மாளிடம் ஓடினள் மலர்க்கொடி.

"அத்தை! எனக்கு வேலைக்கு உத்தரவு வந்துவிட்டது. வருகிற வெள்ளிக்கிழமை; காலை பத்து மணிக்கெல்லாம் நான் கோயம்புத்தூரில் இருக்கவேண்டும்!" என்று வருத்தத்தை மறந்து மலர்க்கொடி சொன்னள்.

புனிதவதியம்மாளுக்குமகிழ்ச்சியுமில்லை, துக்கமுமில்லை. மலர்க்கொடி இனி எங்கிருந்தாலும் அவர்களுக்குஒன்றுதான். கோயம்புத்தூரில் வேலை கிடைத்ததை நினைத்து ஒருவகையில் திருப்தி! அங்கேதான் மலர்க்கொடியின் ஒன்றுவிட்ட பெரியப்பாவின் குடும்பம் இருக்கிறது. அவள் தனியாக இருந்து கஷ்டப்பட வேண்டாமல்லவா?

"செல்வனுக்கு விஷயம் தெரியுமா மலர்க்கொடி?"

"தெரியாது"

"அவன் என்ன சொல்லுகிருனே, பார்ப்போம்!"

வெளியில் சென்றிருந்த செல்வன் அப்போதுதான் வீட்டுக்குள் நுழைந்தான்.

"என்னம்மா விஷயம்?" என்று கேட்டுக்கொண்டே அருகில் வந்தான் செல்வன்.

"மலர்க்கொடிக்கு வேலைக்கு உத்தரவு வந்திருக்கிறது" என்று சொன்னர்கள் புனிதவதியம்மாள்.

"வந்தால் என்ன? அவள் வேலைக்குப்போய் ஆகவேண்டியது ஒன்றுமில்லை!''

"அவசியம் அவள் போகத்தான் வேண்டுமென்கிறாள்''

"உண்மையாகவா......?''

செல்வன் திரும்பினான் மலர்க்கொடி பக்கமாக.

"ஏன் மலர்க்கொடி? அவசியம் போகத்தான்வேண்டுமா?''

"ஆமாம்''

"ஏன்? உனக்கு எங்களைப்பிடிக்கவில்லையா?!'

"அப்படி யார் சொன்னது? வேலைகிடைப்பது குதிரைக்கொம்பாக இருக்கிற இந்தக் காலத்தில் கிடைத்ததை ஏன் உதறித்தள்ள வேண்டும்? கண்ணியமான உத்தியோகம்! கைநிறையச் சம்பளம்! இதைக் கைநழுவவிட எனக்கு மனசில்லை!''

"சரி...உன் விருப்பம்! நீ என்ன நினைத்துக்கொண்டாலும்சரி, இந்த வீடு உன்னுடையது. விரும்பிய போதெல்லாம்வந்து வேண்டியதை எடுத்துச் செல்லலாம். உன் நல்வாழ்வு தான் எங்களுக்குச் சந்தோஷம்!''

செல்வனின் ஆதங்கமானபேச்சு அவள் உள்ளத்தைத் தொடவில்லை. விரும்பியதைத்தரமறுத்துவிட்டு, வேண்டாததைக் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுக்கிறேன் என்றால் யாருக்கு வேண்டும்?

மலர்க்கொடி கோயம்புத்தூர் புறப்பட்டாள்.

செல்வன் இரயில் நிலையம்வரை அவளை வழியனுப்பிவைக்க வந்திருந்தான்.

வண்டி நகர்ந்தது.

"உடம்பைக் கவனமாகப் பார்த்துக்கொள் மலர்க்கொடி! அடிக்கடி கடிதம் எழுத மறந்துவிடாதே!'' என்ற செல்வனின் பரிவு அவள் இதயத்தில் இடம் சேர்க்கமறுத்துவிட்டது. "இனி இந்த உடம்பு எப்படிப்போனால் என்ன?'' விரக்தியில் மூழ்கியபடி வண்டியில்போய்க் கொண்டிருந்தாள் மலர்க்கொடி.

விடுமுறை முடிந்தது. சென்னை வந்து சேர்ந்தான் செல்வன்! சுமார் இருபது நாட்களாக மோனத்தில் திளைத்துக் கிடந்த "மாநிலக் கல்லூரி''யில் சிரிப்பும் குதூகலமும் வெடித்துச் சிதறியது. இப்போது நவநாகரிகத்தின் தொட்டில்என்று கருதப்படும் இடம் கல்லூரியாகத்தானே இருக்கிறது! விதவிதமாக அலங்கரித்துக்கொண்டு, வாழ்வின் கவலை தெரியாத வானம்பாடிகளென நடமாடிக்கொண்டிருந்தனர், மாணவ—மாணவியர்கள்!

ஆனால், செல்வனுக்கு மட்டும் தெம்பில்லை, தெளிவில்லை! காரணம்......அவன் உள்ளம் கவர்ந்த அழகுராணி மாலா வராததுதான். "ஒரு பெண்ணுக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டேன்'' என்று புனிதவதியம்மாளிடம் சொன்னானே செல்வன், அந்தப்பெண் வேறுயாருமல்ல, மாலாவேதான்! கல்லூரிதிறந்து ஒரு வாரமாகியும் அவள் வராததால் செல்வன் குழம்பிக்கொண்டிருந்தான்.

காலம் ஓடியது.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள்—

கல்லூரி முடிந்து தன் அறைக்குத் திரும்பிவந்தான் செல்வன். கதவைத் திறந்து உள்ளே நுழைந்த அவன் காலில் இடறி விழுந்தது ஒருகடிதம். குனிந்து அதை எடுத்தான். அவன் விலாசத்துக்கு வந்த கடிதம்! திறந்திருந்த சன்னல் வழியாக எறிந்துவிட்டுப் போயிருக்கிறான் தபால்காரன்.

உறையின்மேல் பொறித்திருந்த எழுத்தைக் கூர்ந்து நோக்கினான் செல்வன். முத்துமுத்தான அந்த எழுத்துக்களில் மாலாவின் மதிவதனம் மின்னிச் சிரித்தது. பரபரப்போடு உறையை விலக்கினான்.

"செல்வன்!

முதலில் என்னை மன்னித்துவிடுங்கள். முன்பே உங்களிடம் நான் சொல்லியிருக்கிறேனல்லவா, சிலோனில் என் மாமா இருக்கிறார் என்று. அவர் இப்போது ஊர் வந்திருக்கிறார். அவருக்கும் எனக்கும் திருமணம் நிச்சயமாகிவிட்டது. நான் எவ்வளவோ கெஞ்சினேன், மன்றாடினேன், பயங்காட்டிப் பார்த்தேன்—பலனில்லை. "உன்னால் நம் குடும்பம் சீர்குலைந்து போகவழி செய்து விடாதே மாலா...'' என்று என் கால்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் வடித்தனர் என் பெற்றோர்கள். அந்தக் கண்ணீர் என் உறுதியை இருந்த இடம் தெரியாமல் அடித்துக்கொண்டு போய் விட்டது.

நம் காதல் வாழவேண்டுமென்றால், என் குடும்பம் அழியவேண்டும்! இதை நீங்கள் விரும்பமாட்டீர்களென்று நினைக்கிறேன். நடந்ததையெல்லாம் கனவாக எண்ணி மறந்துவிடுங்கள். திருமணத்தோடு என் கல்லூரிப் படிப்புக்கும் முற்றுப்புள்ளி விழுகிறது. மணம் நடந்த ஒரு வாரத்திற்கெல்லாம் நானும் அவரும் சிலோன் போகிறோம். அங்கேதான் எங்கள் இல்லறம் தொடங்க இருக்கிறது.''

மாலா.

செல்வனுக்குத் தலை சுற்றியது. "அடி துரோகி! மாலா'' அவன் வாய் மெல்ல முணுமுணுத்தது. அவன் மனக்கோட்டைகள் எல்லாம் நொடியில் சடசடவென்று தகர்ந்து தரைமட்டமாகிக் கிடந்தன. எதை நினைப்பது? யாரை நோவது? ஊமை கண்ட கனவு போல அவன் ஆசைகள் அத்தனையும் அடங்கி ஒடுங்கிப்போய் விட்டன. நல்ல வேளையாகச் செல்வனுக்குப் பைத்தியம் மட்டும் பிடிக்கவில்லை.

தேர்வு நெருங்கிக்கொண்டு வந்தது.

செல்வனுக்கு இந்த ஆண்டுடன் பி. ஏ. வகுப்பு முடிகிறது. சக மாணவர்கள் இரவும் பகலும் விழுந்து விழுந்து படித்துக்கொண்டிருந்தனர். ஆனால் அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. காதலில் தோல்விகண்ட காளைக்குக் கல்வியில் மனம் செல்லுமா என்ன?

கடமைக்காகத் தேர்வை எழுதி முடித்தான். சோர்ந்த உள்ளத்தோடு, தன் சொந்த ஊரான உதயபுரிக்கு வந்து சேர்ந்தான் செல்வன்.

'செல்வா! பரிட்சையெல்லாம் நல்லபடியாக எழுதியிருக்கிறாயா?'' என்று கேட்டார்கள் புனிதவதி அம்மாள்.

'என்னமோ... எழுதியிருக்கிறேனம்மா!' என்று விரக்தியோடு பதிலளித்தான் செல்வன்.

மகனின் பேச்சும் நடவடிக்கையும் புனிதவதியம்மாளுக்குப் புதிராகப் பட்டது. ஒரு நாள் நேரடியாகவே கேட்டார்கள்.

"ஏண்டா செல்வா! வந்தது விருந்து ஒரு மாதிரியாக இருக்கிறாயே. என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லேயம்மா. தூக்கமில்லாமல் பரிட்சைக்குப் படித்தது உடம்புக்கு ஆகவில்லை" என்று மழுப்பியவன், 'ஏம்மா ... மலர்க்கொடியிடமிருந்து கடிதம் ஏதாவது வந்ததா?' என்று கேட்டான்.

"வராமல் இருக்குமா? நீ செய்த கோலத்திற்கு வேறொரு பெண்ணாக இருந்தால் நம் திசையைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டாள். குணவதியான மலர்க்கொடி அப்படியிருப்பாளா? இதோ பார்..." என்று மலர்க்கொடி எழுதிய கடிதங்களைச் செல்வனுக்கு முன்னால் கொண்டுவந்து போட்டார்கள் புனிதவதியம்மாள்.

கடிதங்கள் ஒவ்வொன்றையும் படித்துப் பார்த்தான் செல்வன். அதில் மலர்க்கொடியின் அன்பு, ஊற்றுகச் சுரந்து ஓடிக்கொண்டிருந்தது. மலர்க்கொடி எத்தனை நல்லவள்?

செல்வனின் மனச்சாட்சி அவனைச் சுட்டெரித்தது.

"அம்மா! நாளைக்கே கோயம்புத்தூர் சென்று மலர்க்கொடியைப் பார்த்து வருகிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?" உணர்ச்சி வயப்பட்டுப் பேசினான் செல்வன்.

"மகராசனாகப் போய்வாப்பா!" என்றார்கள் புனிதவதியம்மாள். அவர்கள் எதிர்பார்த்ததும் இதுதானே?

கோயம்புத்தூர் பயணமானான் செல்வன்!

வழியெல்லாம் மலர்க்கொடியின் நினைவுதான் அவனுக்கு!

மாலை ஐந்துமணிக்கெல்லாம் செல்வன் கோயம்புத்தூர் சேர்ந்தான். அவன் வீட்டுக்குள் நுழைவதற்கும், அலுவலகம் முடிந்து மலர்க்கொடி வருவதற்கும் சரியாக இருந்தது.

செல்வனின் திடீர் வருகை மலர்க்கொடிக்கு வியப்பைத் தந்தது!

"வாருங்கள் அத்தான்! ஊரில் அம்மா நலமா?" என்று மலர்க்கொடி வரவேற்றாள், பணிவுடன்.

"நலமாக இருக்கிறார்கள். உன்னைப் பார்க்கத்தான் அம்மாவுக்கு நிறைய ஆசை!" என்றான் செல்வன்.

பிறகு வெகுநேரம் வரை மலர்க்கொடியின் பெரியப்பாவோடு குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான்.

வந்தது இரவு.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு; தனக்காக ஒதுக்கியிருந்த அறையில் விழிகளை மூடியவாறு சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தான் செல்வன். அப்போது பால் குவளையைக் கையில் எடுத்துக்கொண்டு, மலர்க்கொடி அந்த அறையில் நுழைந்தாள்.

"அத்தான், பால் சாப்பிடுங்கள்!" என்று மலர்க்கொடி செல்வன் பக்கம் நீட்டினாள். இரவில் பால் சாப்பிடுவது அவனுக்குப் பழக்கம்!

குவளையைக் கையில் வாங்கியவன் திடீரென்று இப்படிக் கேட்டான்.

"மலர்க்கொடி, எங்களுக்காக நீ ஒரு தியாகம் செய்யவேண்டும். செய்வாயா?"

"முடியுமானால் மறுக்கமாட்டேன். சொல்லுங்கள!"

"அம்மாவின் கனவை நனவாக்கவேண்டும்!"

மலர்க்கொடி விழித்தாள் புரியாமல்.

"ஆம், மலர்க்கொடி! உன்னை மனப்பூர்வமாக விரும்புகிறேன். மறுக்காமல் என்னை ஏற்றுக்கொள்!" என்றான் செல்வன்.

"தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள் அத்தான்! உங்களையே கணவனாக வரித்துக் காலமெல்லாம் களிப்புக் கடலில் திளைக்கவேண்டும் என்ற ஆசை ஒன்றுதான் என் நெஞ்சில் நிரம்பித் ததும்பியது. அது ஒரு காலம்! இப்போது வாழ்க்கையின் ஆசாபாசங்கள் — அபிலாசைகள் அவ்வளவையும் வெறுத்துவிட்டு வெகுதூரம் வந்துவிட்டேன். மீண்டும் பழைய நிலைக்குவர என்னால் ஆகாது" என்று மலர்க்கொடி அமைதியாகச் சொன்னாள்.

"அப்படிச் சொல்லாதே மலர்க்கொடி. எனக்காக இல்லாவிட்டாலும், அம்மாவை நினைத்தாவது உன் முடிவை மாற்றிக்கொள். உன்னை மார்பிலும் தோளிலும் தூக்கிச் சுமந்து ஆளாக்கிய அந்த மாதாவின் கடைசி விருப்பத்தை நிறைவேற்று! என் தவறால் ஏற்கெனவே நொந்துபோயிருக்கும் அவர்கள் இதயத்தில் நீயும் ஈட்டியைப் பாய்ச்சி விடாதே! அப்புறம் நாம் இரண்டு பேருமே அன்புத் தெய்வத்தை அநியாயமாக இழந்துவிடுவோம்!" என்று நாக்குழறப் பேசினான் செல்வன்.

மலர்க்கொடியின் உள்ளம் களமாகியது. அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இரு தலைக் கொள்ளி எறும்பாகத் தத்தளித்தாள். கண்களை இறுக மூடிக்கொண்டு "ஐயோ இதென்ன சோதனை" என்று அலமந்தாள் மலர்க்கொடி. அவள் இதயத்தில் திடீரென்று, புனிதவதியம்மாள் கண்ணீரும் கம்பலையுமாய் அவள் எதிரில் மண்டியிட்டு எதையோ இரு கையேந்திக் கேட்பதுபோன்ற ஒரு காட்சி மின்னி மறைந்தது. அவ்வளவுதான்! மலர்க்கொடியின் வைராக்கியம் சுக்கு நூறாகத் தகர்ந்தது நொடிப் பொழுதில்.

"சரியத்தான்! அத்தையின் விருப்பம் அதுவானால், அதை மறுக்க எனக்குச் சக்தியில்லை. அவர்களுக்காக என் உயிரைக் கூடத் தியாகம் செய்யக் காத்திருக்கிறேன்!"

செல்வனுக்கு உடம்பெல்லாம் குளிர்ந்தது மகிழ்ச்சியால். "மலர்க்கொடி! தமிழ்ப்பெண்களின் பண்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக அல்லவா என் எதிரில் நிற்கின்றாய்; இப்படிப்பட்ட உன்னையா மதியிழந்து மறக்க எண்ணினேன்; என் தவறை மறந்துவிடு; இல்லை இல்லை, மன்னித்துவிடு" என்று அவள் கரங்களை இறுகப்பற்றிக்கொண்டு உரக்கக் கூவினான். "அப்படியெல்லாம் சொல்லாதீர்களத்தான்" என்று மலர்க்கொடி தன் கண்ணிரால் செல்வன் மார்பை நனைத்தாள். இரண்டு பேரின் கண்களும் நீரைக் குபுகுபு வென்று வெளிக்கொட்டின. ஆமாம், அதுதான் மகிழ்ச்சிக் கண்ணீர்! ★




# செயல்

—[கனகு]—

அவனுக்கு உறவினர்கள் ஏராளம். உதவுவார் யாருமில்லை. நல்ல உழைப்பாளி. ஓயாது உழைத்தான். இரவு, பகல் உழைத்தான். ஊதியந்தான் போதிய அளவு கிடைத்ததா? அதுவுமில்லை. என்ன செய்வதென்றே தோன்றாத நிலை. எப்படியோ காலம் பறந்துகொண்டிருந்தது. அவன் எல்லை இல்லாச் சிந்தனைக் கடலுள் மூழ்கிக்கொண்டிருந்தான். உறங்குவது சிறிது நேரம். அந்த வேளையும் கனவாக வந்து பலவித எண்ணங்கள் அவனை உலுப்பிக்கொண்டிருக்கும். இதற்கு ஒரு முடிவே இல்லையா? தொல்லையும், துன்பமும் எல்லை இல்லாது தொடர்ந்து கொண்டுதான் இருக்குமா? சே, என்ன வாழ்க்கை! உப்புச்சப்பு இல்லாத வாழ்க்கை! உடலையும், உள்ளத்தையும் ஒருசேர வாட்டி எடுக்கும் வாழ்க்கை! இந்த வாழ்க்கைக்கு விடிவே கிடையாதா? விடிவில்லாத இந்த வாழ்க்கைக்கு நாம் ஓர் முடிவு தேடிக்கொண்டால் என்ன? இந்த உலகத்தினின்றே ஒழிந்து போய்விட்டால் என்ன?

எப்படிப் போய்விட முடியும்? உனை எதிர்பார்த்துச் சிலர் காத்துக் கிடக்கின்றனரே! அவர்கள் கதி எல்லாம் என்னாவது? நீ வேண்டுமானால் நினைத்த கணத்திலேயே உன் வாழ்க்கைக்கு ஒரு முடிவு தேடிக்கொள்ளலாம். மற்றவர்கள் நிலை? வேண்டுமானால் ஒன்று செய்யலாம். உன்னை எதிர்பார்த்து நிற்போர் அத்தனைபேர் வாழ்வையும் முடித்துவிட்டு, உன் வாழ்வை நீ முடித்துக்கொள்ளலாம். அப்படிச் செய்யமுடியுமா? சொல். முடியுமானால் செய்துவிடு அப்படி. அதை இன்றே செய். இன்றே செய்.

சுற்றிச் சுற்றி வந்தது அவன் எண்ணம். மறுபடியும், கிளம்பிய இடத்துக்கு அந்த எண்ணம் வந்து சேர்ந்தது. வெறுப்பு, கவலை ஏமாற்றம் இவற்றிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை. குழம்பிய சிந்தை குழம்பிக்கொண்டே கிடந்தது. மரத்துப்போய்விட்டது உள்ளம். சோர்ந்து, செயலிழந்து விட்டது உடலம்.

கீழ்வானில் செம்பரிதி தோன்றியது. காலை வந்தது. அது அன்றாடம் உண்டாகும் நிகழ்ச்சி. வாழ்விலே விடிவு காணாது சோர்ந்து கிடப்போர்க்கும், விடிந்த வாழ்வில் மகிழ்ந்த செய்திகளை — மகிழும் செய்திகளை எண்ணி மனம் இன்ப போதையில் திளைக்க உலா வருவோர்க்கும்,—ஆக அனைவர்க்கும் புது நாளாய் வரும் காலைநேரம் அது. அந்தக் காலைநேரம் அவன் உள்ளத்தில் ஓரளவு தெளிவைத் தந்திருந்தது. அந்தத் தெளிவோடு அவன் வெளியில் வந்தான்.

நடந்தான். சுற்றுமுற்றும் குறிக்கோள் இல்லாமல் எங்கோ பார்த்தபடி நடந்தான்.

அங்கே என்ன கூட்டம்? இருப்புப் பாதையில்! பலர் வந்தனர், பலர் போயினர். பலர் கேட்டனர், சிலர் கூறினர். மிகச் சிலர் உரையாடிக்கொண்டு சென்றனர். அவற்றை எல்லாம் கேட்கவேண்டுமென்று அவன் விழையவில்லை. அவன் விழையவில்லை என்பதற்காக அவை அவன் செவிகளில் வந்து விழாமல் இருக்கவுமில்லை.

"கோழை! யாரோ இரவு திட்டினார்களாம். அதற்காக இரயிலில் போய் விழுந்துவிட்டான்—"

"பாவம், நல்லவனாயிற்றே! ஓயாது, ஒழியாது உழைப்பவனாயிற்றே! அவனா இப்படித் தன் வாழ்க்கையைமுடித்துக்கொண்டான்? சே! எத்தனை பெரிய பைத்தியக்காரச் செயல்! உணர்வுள்ள எவனும் செய்யக்கூடியதா இது! வாழ்க்கையில் துன்பந்தான் மிகுதி—நாம் இன்பத்தைத் தேடித் தேடி அலைந்துகொண்டிருக்கும் நேரத்தில் துன்பத்தைப் பற்றிய எண்ணமே இல்லையானால், துன்பம் எங்கே இருக்கிறது? எங்கிருந்து வரப்போகிறது?"

"இவ்வளவு தூரம் சிந்திக்க அவனுக்கு ஆற்றல் இருக்கின்றதா என்ன! அவன் ஒரு பாட்டாளி! உடல் உழைப்பாளி! ஏற்பட்டது வெறுப்பு மனத்தில். அதனை எப்படி மாற்றுவது என்று புலப்படவில்லை அவனுக்கு. கோழை உள்ளம் வேறு. நல்லுரை பகர்வாரும் இல்லை. என்ன செய்வான்! எண்ணியதை உடனே செயலாக்கி விட்டான்."

"ஆமாம்! கோழையாய் இருந்தாலும் சிந்திக்கும் தன்மைவேண்டும். சிந்திக்கும் தன்மை இல்லாது போனால், அஞ்சாமையாவது இருக்கவேண்டும். தேவையான இரண்டுமே அவனிடம் இல்லை. ஆத்திரம் வந்த வழி வாழ்க்கையை முடித்துக்கொண்டுவிட்டான்."

இவ்வளவு கேட்டது போதும் அவன். திரும்பி நடந்தான— இருப்பிடத்தை நோக்கி. துன்பமாம் துன்பம்! இன்பமாம் இன்பம்! எல்லாம் எண்ணத்தைப் பொறுத்தது. வரட்டும். எதுவேண்டுமானாலும் வந்து என்பாதையில் குறுக்கிடட்டும். நான் சென்று கொண்டே இருக்கிறேன். இன்பமோ, துன்பமோ! இனி எனக்கு எதுவுமே இலட்சியம் இல்லை. செயல்! அதுதான் முக்கியம். அதைத்தான் இனி நான் செய்து கொண்டிருப்பேன்! செயல் நிறைவே என் உள நிறைவு! உள நிறைவே செயல் நிறைவு!

★

# சுமைதாங்கி!

மனிதனுடைய இன்றியமையாத் தேவைக்கு வேண்டிய பொருள்களின் விலையோ எல்லையின்றி ஏறிக்கொண்டே இருக்கின்றது. சில பொருள்கள் உலகம் தோன்றிய நாள் தொட்டு இது நாள் வரைக்கும் காணுத உச்ச நிலையைக் கண்டு வருகின்றன. "எப்படி வாழப்போகிறேம்" என்று ஏங்கிக் கொண்டிருக்கும் சமயத்திலே வரி உயர்வையும் தந்து, அவர்களிடமே உதவியும் கோருகிறது டில்லி சர்க்கார். எளியவரின் உதவியை எதிர்ப்பார்த்து வாழ நினைத்துக்கொண்டிருக்கும் சர்க்கார் என்றும் ஏற்றத்தைக் காண முடியாது.

ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றச் சிறு சேமிடப் பத்திரங்களையும், பரிசுக் கடன் பத்திரங்களையும் வாங்கவேண்டும். கூட்டுறவு, க்ஷயரோகத் தடுப்பு, மத்திய உணவு, பள்ளி சீரமைப்பு, பள்ளிக் கட்டிட நிதிபோன்ற பலவற்றிலுக்கு உதவிகோரி அவ்வுதவியால் சில செயல்களை இச்சர்க்கார் நிறைவேற்றி வருகிறது. மக்கள் வரி தராமல் மக்களின் காரியங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிருர்கள் என்றுதானே பொருள். அப்படி இருக்க, பின்னும் புது வரிகள் அவர்களின் தலையில் வைத்தால் அது ஆனந்திக்கக் கூடிய செயல் என்று சொல்ல முடியுமா?

வரிமேல் வரிவிதித்து உதவியும் கோரும் இந்தச் சர்க்காருக்கு ஒரு உண்மையை நாங்கள் சொல்லவில்லை. உலகுக்கெல்லாம் ஒரே நீதியை வகுத்த நீதியின் காவலன் கூறுகின்ருன்.

"கோலொடு நின்ருன் இடு என்றது
போலும்
கோலொடு நின்ருன் இறை."

என்று. "ஆட்சிக்குரிய கோலை ஏந்தி நின்ற அரசு, குடிகளைப் பொருள் கேட்டல், போகும் வழியில் தனியே வேல் ஏந்தி நின்ற கள்வன், 'கொடு' என்பதைப் போன்றது" என்று வள்ளுவர் கூறுவது போலத்தான் இந்தச் சர்க்காரின் நெறி இருக்கிறது.

**சி. பெரியண்ணன்**

உதவி புரிய மக்களுக்கு வசதியிருக்கிறதா? அவர்களால் உதவி புரிய முடியுமா? என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். வசதியுள்ளோரை மட்டும் உதவி செய்ய வேண்டுதல் நல்லது. தன்னுலான உதவியைச் செய்தும் ஏழைக்குக் கிடைக்கும் பரிசு வரிப் பாரமதான். ஏழை சுமக்கின்ருன்; ஏற்றம் கொண்டவன் அனுபவிக்கின்ருன். ஆளும் சர்க்காரே வலியவன், மெலியவன் பாகுபாட்டைப் பிரித்து அநீதி இழைக்கிறது. வாழ்வோர் ஓரினம்; வதைபடுவோர் ஓரினம்; இப்படியே நிலைமையை வளர்த்தால்...! சரி; அதற்குக் காலம் பாடம் கற்பிக்கும்.

1960—61 ஆம் ஆண்டு **மத்திய** பட்ஜெட்டு நமக்கு இந்தப் பாடத்தைத்தான் சொல்லுகிறது. நடைமுதல் வரி விகிதப்படி இந்திய சர்க்காரின் 60—61 ஆண்டின் வருமான மதிப்பீடு ரூ. 896·45 கோடியாகும். செலவின் மதிப்பீடு ரூ. 980 35 கோடி. வருமான மதிப்பீட்டைவிடச் செலவின் மதிபபீடு 83 90 கோடி ரூபாய் அதிகம். பாதுகாப்புப் படைகளுக்கு மட்டும் 272 26 கோடி ரூபாயும், அவையொழிந்த மற்றைப் பொதுத் துறைக்கு 708 09 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று மத்திய சர்க்கார் நிதிமந்திரி மக்கள் சபையில் பட்ஜெட்டைச் சமர்ப்பித்து பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.*

23·53 கோடி ரூபாய் வருவாய் தரத்தக்க வரி இனங்கள் அனைத்தும் ஏழைகளைக் கடைக்காலாக அமைத்துக்கொண்டிருக்கிறது. பணம் படைத்தோர் மீது வரிப் பாரம் வைத்தால் பாராளும் சர்க்காரின் 'விதி'யையே மாற்றிவிடுவார்களே! ஆளும் சர்க்காரின் கோட்டைக்குள்ளேயே டாடாவும், பிர்லாவும், மிட்டாவும், மிராசும் வேட்டை

## * பட்ஜெட் கண்ணேட்டம்

| விவரம் | 1959—60 பட்ஜெட் மதிப்பீடு | 1959—60 திருத்தப்பட்ட மதிப்பீடு | 1960—61 பட்ஜெட் மதிப்பீடு |
|---|---|---|---|
| | இலட்ச ரூபாய்களில் | | |
| வருமானம் | 780,10 | 838,66 | 896 45 |
| புதுவரி | | | 23, 53 |
| செலவு | 839 18 | 854,05 | 980,35 |
| துண்டு | 59,08 | 15,39 | 60,37 |

யாடித் திரியும்போது "இது சரியல்ல" எனபோர் யார் இருக்கிறார்கள், ஏழைக்கு நீதி கிடைக்கும் வழிகாண! விரல் விட்டு எண்ணக்கூடிய ஏழையரின் நண்பர் ஒரு சிலர் இருந்தாலும் பணம் படைத்தோர் அவர்களைப் பார்த்து ஓ! அப்படியா! இதோ, நில் பார்க்கலாம்!" என்று சவால் விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். வேதனை தரும் இன்னலைத் தாங்காது வெளி வந்து, கண்ணீர் கரை புரளக் கதறியழுவதைத் தவிர வேறொன்றையும் அவர்களால் செய்ய முடியவில்லை.

'ஜனநாயக சர்க்கார்' என்று பறைசாற்றும், 'சோஷியலிஸ பாணி' என்று புகழ்பாடும் குடியரசுக் கோமகனரின் ஆட்சியில் தான் தாங்கமுடியாத வரிச் சுமையை மக்கள் தாங்கவேண்டியிருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சி ஏற்றகாலம் முதல் இதுநாள் வரைக்கும் பற்றுக் குறையால் பஞ்சையரின் வாழ்வைத்தான் நாசம் செய்துவருகிறார்களே ஒழிய, வாழ்வளித்த செயல் ஒன்றையும் நம்மால் காணமுடியவில்லை. ஏழை எளியவரின் பொறுமையைச் சோதிக்கிறார்களோ? அல்லது "குமுறும் எரிமலைதான் ஏழையர் உலகம்" என்கிறார்களே, அதைத்தான் கொஞ்சம் பார்க்கலாமே! என்ற இறுமாப்புத்தானோ! தெரியவில்லை. ஆனால் எப்படி நினைத்துக்கொண்டு இப்படி அநியாயம் செய்தாலும் அவர்களுக்கு ஒரு உண்மையை மட்டும் உறுதியாக சொல்லிவைக்கிறோம். சிந்தித்துப் பார்க்கட்டும்'

பாடுபட்டும் பலன் காணாது கொடுமையால் அவதிப்படும் பாட்டாளி ஏழை மக்களைத் துன்புறுத்திக், காலாகாலமாகக் சுகபோக வாழ்க்கையில் நிரந்தரமாய் வாழ்ந்தோரை வரலாற்றில் காணமுடியாது. ஆனால் அதற்கு மாறாக குமுறும் எரிமலையின் வாயில் சிக்கிச் சிதைந்து மண்ணோடு மண்ணை ஆண்டோரைத்தான நம்மால் காணமுடிகிறது.

இனி வரும் ஆண்டிலும் இச் சர்க்கார் 8 இனங்களின்மேல் புது மறைமுக வரிகளை விதித்திருக்கிறார்கள்.

அவை வருமாறு:-

# புதிய எதிர்வரி இனங்கள்

| வ எண் | இனம் | வரி விகிதம் | வருமானம் |
|---|---|---|---|
| 1 | டின் பிளேட்டுகள் டின் தகடுகள் | மெட்ரிக் டன் 1-க்கு ரூ. 200 | ரூ. 208-இலட்சம் |
| 2 | தேனிரும்பு | மெட்ரிக் டன் 1-க்கு ரூ. 10 | ரூ. 60-இலட்சம் |
| 3 | அலுமினியத் தகடுகள் வட்டத் தகடுகள் | மெட்ரிக்டன் 1-க்கு ரூ. 500 | ரூ. 86-இலட்சம் |
| | அலுமினியக்கட்டிகள் | மெட்ரிக்டன் 1-க்கு ரூ. 300 | |
| 4 | இன்டர்னல் கம்பஸ்டின் என்ஜின் | விலைமதிப்பில் (அட்வெல்லோரம்) 10% | ரூ. 107-இலட்சம் |
| | எரிப்பு என்ஜின்கள் தொழில், விவசாய ரக என்ஜின் | விலைமதிப்பில் 5% | |
| 5 | சைக்கிள் சம்மந்தமான சில உறுப்புக்கள் | பிரிவில்மீது ரூ. 2 ரிம் சக்கரம் ரூ. 4 | ரூ. 100-இலட்சம் |
| | வேலை தீர்ந்த சைக்கிள் | 1-சைக்கிள்மீது ரூ. 10 | |
| 6 | மின்சார மோட்டார்கள், உறுப்புக்கள் | விலைமதிப்பில் 5% முதல் 15% வரை | ரூ. 46-இலட்சம் |
| 7 | எக்ஸ்போஸ்டு, சினே மாட்டோ கிராப் பிலிம் | மீட்டர் 1-க்கு 10-நயே பைசே முதல் 50-நயே பைசே வரை | ரூ. 75-இலட்சம் |
| 8 | பட்டுத் துணி | சதுரகெஜம் 1-க்கு 30 நயேபைசே வீதம் | ரூ. 30-இலட்சம் |

# தற்போதுள்ள வரிவிதிப்பில் சரிக்கட்டல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சகலரக மோட்டார் வண்டிகள் | விலைமதிப்பில் 15% | ரூ. 625-இலட்சம் |
| 2 | டீசல் என்ணெய் பேசிக்ரேட் அதிகரிப்பு | இம்பீரியல் காலன் 1-க்கு 25-ந. பைசே | ரூ. 504-இலட்சம் |
| 3 | இயந்திரத்தால் செய்த ஸோல்கள், ஹீல்கள் (அடித்தோல், குதிக்கால் பகுதி) | விலைமதிப்பில் 15% உயரும் | ரூ. 20-இலட்சம் |
| 4 | ஸ்டேபிள்பைபர்நூல்தயாரிப்புகள் செயற்கை பட்டு போல் பாவிக்கப்படும். | சிறு அளவு தீர்வை | ரூ. 195-இலட்சம் ரூ. 65-இலட்சம் ★ |
| 5 | மின்சார விசிறிகள், பல்புகள் பேட்டரிகள். | எக்ஸைஸ் தீர்வை அதிகம் 50% | ரூ. 90-இலட்சம் |
| 6 | தேயிலை வேறுசிலவும் | பவுண்டு 1-க்கு 19-ந. பைசேவிலிருந்து 30-நயே பைசே அதிகரிப்பு. | ரூ. 27-இலட்சம் ரூ. 7-இலட்சம் ★ |
| 7 | சுங்கத்தீர்வை. | — | ரூ. 250-இலட்சம் |

| | | |
|---|---|---|
| | ஆகமொத்தம் | ரூ. 2423 இலட்சம். |
| ★ | இராஜ்ஜியசர்க்காருக்கு | ரூ. 70 இலட்சம். |
| | நிகர வருமானம் | ரூ. 2353 இலட்சம். |

இந்த வரி விதிப்பைத் தீர ஆர்ர்யும் அறிவாளிகளின் ஆராய்ச்சியிலே கிடைக்கும் முடிவுதான் என்ன? பணம் படைத்தோரையும், பச்சோந்தி முதலாளிகளையும் பக்குவமாகப் பிரித்துவிட்டுப் பாட்டாளி மக்களின்மீதும், எளியோர்மீதும் வரிப் பாரத்தைச் சுமத்தியிருக்கும் செயல் மிகவும் சாமர்த்தியமான செயல் எனத்தான் ஒத்துக்கொள்ளவேண்டும்! எல்லா இனங்களின் மீதும் வரி விதிக்கும்போது, வாயில்லாப் பொது மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இந்தச் சர்க்கார் உணரவேண்டும். "பொருள்களை உற்பத்தி செய்யும் முதலாளிகள், விற்பனை செய்யும் பணக்காரர்கள் இவ்வரிகளைத் தாங்களாகவே செலுத்தவேண்டும்" என்று வரிவிதிப்பு விதி கூறினால், "அந்த வரிகளை உற்பத்திப் பொருள்களின் மீதோ விற்பனைப் பொருள்களின் மீதோ உயர்த்துதல் கூடாது" என்று இந்தச் சர்க்கார் சட்டமியற்றினால் பொது மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். ஆனால் அவர்களுக்கு ஆதரவு தந்து அபலைகளின் வாழ்வைத் தானே சோதிக்கிறது இந்தச் சர்க்கார்.

விற்பனையின்மீது வரி விதிப்பதால் வாங்குவோர்தான் வரி செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இப்போது வரிவிதித்திருக்கும் பொருள்களில் முக்காலே மூன்று வீசம் ஏழை மக்களின் சொத்தாக இருக்கும்போது—ஏழை மக்கள் பயன் படுத்தும் சாதனங்களாக இருக்கும்போது-வரி செலுத்தவேண்டியவர்கள் ஏழை மக்கள்தான் என்பதை யாராவது மறுக்கமுடியுமா? தங்கத் தாம்பாளமோ, வெள்ளிச் சாமான்களோ, எவர் சில்வர் பாத்திரங்களோ ஏழை எளியவரின் சொத்தல்ல; அவைகளுக்கும் ஏழை மக்களுக்கும் நீண்ட தூரம், மண்பாண்டங்களும், அலுமினியச் சாமான்களும்தான் அவர்களின் அன்றாடப் பழக்கத்தில் இருந்துவரும் அமுதசுரபிகள் என்பதை வரி விதித்திருப்போர் அறியமாட்டார்கள், என நினைக்கிறோம். அவைகள் பணக்காரர்களின் பார்வைக்கு அப்பாற்பட்டவை. அந்த ஏழையின் அன்றாட வாழ்க்கையில் உதவி புரியும் அலுமினியத்தின் மீதும் வரி,

“சோத்துப் பிண்டங்களான தொழிலாளிகள் எழுப்பும் கூக்குரல் என் செவிகளுக்கு இன்பமளிக்கின்றன. “ஏன்” என்று கேட்கவோ, “பொறுங்கள்” என்று கூறவோ எனக்குநேரமில்லை. உண்ணவும், உண்டது செரிக்கவும் உல்லாசமாய்உலவிவரவே எனக்கு நேரம் சரியாக இருக்கிறது.” என்றுரைத்துச் செயல்படுத்தும் பணக்கார முதலாளி வர்க்கம் 'பிளிமத்' காரிலேறிப் பவனிவரும் கண்ணுக்கினிய காட்சியைத்தான் நம்மால் காணமுடிகிறது. அப்படி அவர்கள் பவனிவருவதால் நாட்டுக்கும், பொருளாதாரத்துக்கும், சர்க்காருக்கும் ஏதாவது இலாபமுண்டா? என்றால் அதுதான் கிடையாது. அங்கே அனைத்தும் விரயமாக்கப்படுகிறது பயனற்ற துறையிலே. அவைகளுக்கும், அவர்களுக்கும் வரிமேல்வரி விதித்தால் அதிலே பொருளிருக்கிறது.

ஆனால், காலை முதல் மாலைவரை பாடுபடும் பாட்டாளி, வாழ்க்கை ஓட்டத்திலே வழுக்கி விழவைக்கும் பொருளாதார முட்டுக்கட்டையிலிருந்து ஏதோ ஒரு சிறிது தொகையை மிச்சப்படுத்தி, துவண்டுவாடும் தன் இல்லத்தைச் சிறிது துளிர்விடவைக்கவும், நாட்டின் முன்னேற்றக் காரியங்களை இனிது முடிக்கவும் பயன்படுத்தும் வாகனந்தான் சைகிள். அச் சைக்கிளின் துணையால்தான் நாட்டின் பெருவாரியான காரியங்கள் நடக்கின்றன. குறைந்தபட்சம் சைகில் கூட இல்லாமல் தொழிலாளி எப்படித்தான் தொழிலகத்தை அடையமுடியும்? தொழிற்சாலை பக்கத்திலே, முதலாளியின் சேமிப்புக் கிடங்குகளிருக்கும்; அவையடுத்து அலுவலகங்கள் இருக்கும். கடைத்தெரு காட்சி தரும்; கனதனவான்களின் பங்களாக்கள் பரந்து கிடக்கும், பூங்காக்களும், ஆஸ்பத்திரிகளும், கழிவு நீர் ஓடைகளும் இருக்கும். இவைகளை எல்லாம் கடந்து சென்றால்தான் “நரகலோகம்” என்று சொல்லப்படுகின்ற தொழிலாளரின்குடியிருப்புக் காலனி இருக்கும். அங்கேதான் அவனால் வாழமுடிகிறது. அங்கு வாழ்க்கை நடத்துவதற்கே அவனுடைய பொருளாதாரம் முன்னும் பின்னும் உதைக்கின்றது. ஒரு முதலாளியின் பங்களா மட்டும் ஒரு மைல் நீளம் என்றால், தொழிற்சாலைக்கும் அவன் குடியிருக்கும் இடத்திற்கும் எவ்வளவு தூரமிருக்கும் என்று நீங்களே கணித்துப் பாருங்கள். அந்தச் சில மைல்களைக் கடந்து செல்லக் கால் நடையை அவன் பயன் படுத்தினால் காரிய நேரத்தில் தொழிலகத்தை அடையமுடியாது. அப்படிக் கால் நடையால் அடைய முயற்சித்தாலும், பல மைல் நடந்து சென்று தொழிலில் சோர்வின்றி உழைக்கமுடியாது. அதனால்தான் அந்த ஏழைத் தொழிலாளி வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி சைகிள் வண்டி வாங்கி காரியத்தைக் காலத்தோடு ஆரம்பிக்கிறான்.

அரசியல் கீழ்த்தர அலுவலாளர்களும், ஆசிரியர்களும், தொழிலாளிகளும், விவசாயிகளும் அத்தனை எளிய மக்களும் சைகிளைத்தான் நம்பிக்கொண்டிருக்கின்றனர். அச்சைகிளால்தான் ஏதோ சிறிது இன்பமும் கண்டு வருகின்றனர். நாட்டின் முதுகெலும்பான பாட்டாளிகள் பயன்படுத்தும் அச் சைகிளின்மீதும் இச்சர்க்கார் வரி விதித்திருக்கிறது.

“நாடு நலம்பெற வேண்டுமானால் விவசாயத்தைப் பெருக்கவேண்டும்” என்று ஐந்துஏக்கர்நிலம்வாங்கிய கதர்ச் சட்டைக்காரர் முதல், நாடாளும் தலைவர் வரை நாவினிக்கப் பேசிவிட்டு, மின்சார மோட்டார்களின்மீதும், டீசல் எண்ணெய்

★

## பாராட்டு விழா

“திராவிட ஆட்சிமுறை;” “படிப்படிதெப்படி;” “திருக்குறள் அந்தாதி;” “தமிழன் உலா;” “புலவர் விடுதூது” ஆகிய நூல்களின் ஆசிரியர் இராசிபுரம் ஆர். கே. அரசுரங்கசாமி அவர்களுக்கு 20–3–60ல் ஆரணியில், அவரது தொண்டினைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி 251. வெண்பொற்காசுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

★

மேலும் வரி விதித்தால் அவர்களின் பேச்சிலே என்ன அர்த்தத்தை நாம் காண முடியும்.

இப்போதுதான் இராமபுறங்களுக்கு மின்சாரத்தைப் பரப்பி வருகிறார்கள். கிணறுகளையே எதிர்பார்த்து வாழும் ஏழை விவசாயிகள் மாடுகளின் உழைப்பையும், நஷ்டத்தையும் போக்குவதற்காகத் தங்களின் ஆசைகளை மின்சாரத்தின் பக்கம் திருப்புகிறார்கள். இந்நேரத்தில் மின்சார மோட்டார்களுக்கு வரி விதிப்பது சரிதானா? மின்விசை பரவாத கிராமங்களில் ஆயில் என்ஜின்களை அமைத்து டீசல், குருடாயில் எண்ணெய்களால் ஓட்டி நீர் இறைத்து வருகிறார்கள். அவர்களின் தலையிலும் வரியைச் சுமத்தியிருக்கிறார்கள்.

ஆளும் சர்க்காரின் முதலீடு இன்றியே கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் தருவது திரைப்படத் தொழில். அச்சினிமாப் படங்களின்மீதும் வரி விதித்திருப்பது அத்துறையிலுள்ளோரையும், பொதுமக்களையும் அது பெரிதும் பாதிக்கிறது.

ஆலையிலே வேலை செய்து அலுத்துப்போய் வீடு திரும்பும் பாட்டாளி "பழரசமோ, பாதாம் கிரோ, ஓவலோ, அருந்த முடியாது. குறைந்த பட்சம் காபி கூட அருந்தப் பயப்படுகிறான். வருவாய் அவ்வளவு!!! அவன் என்ன செய்வான்? அவன் நம்பியிருப்பதெல்லாம் தேநீரைத்தான்; அது ஒரு ஆறு காசு கொடுத்தால் ஏழையின் களைப்பில் இடைத்துவிடுகிறது. காபி என்றால் பதினைந்து காசு கொடுக்க வேண்டும். ஒன்பது காசை மிச்சப்படுத்தினால் இல்லத்துப் பற்றுக் குறைச் செலவுகளுக்குச் சரிக்கட்டலாம்" என்ற நப்பாசையால் தான் அவன் தேநீரை அருந்துகிறான். அலுத்து வரும் அந்த நல்லவனுக்கு அதுகூட இல்லையானால் அவன் எப்படித்தான் உழைக்கமுடியும்? ஒரு உண்மையைச் சொல்லி வைக்கிறோம். ஒரு கவிஞன் சொல்லியதுபோல, அந்தத் தேநீரே சில தொழிலாளிகளுக்கு உணவாக இருந்து வருகிறது. அந்தத் தேயிலைக்கும் வரியை ஏற்றியுள்ள செயல் மிகவும் வருந்தத்தக்கது.

மோட்டார்கள், சுய இயக்க என்ஜின் டீசல் எண்ணெய் இவைகளின்மீது வரி விதித்திருப்பதால் போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்படுகிறது. மோட்டார்கள் விலை ஏறின உடனே கட்டணங்களும் உயரும். அதனால் பாதிக்கப்படுவது ஏழை நடுத்தர மக்கள்தானே! பணம் படைத்தோர் யார் பஸ் ஏறிச் செல்லப்போகிறார்கள்? லாரியின் கட்டணங்கள் உயர்ந்தால் அவைகள் ஏற்றிவரும் பொருள்களின்மேல் விலை ஏற்றம் ஏற்படும். அந்த ஏற்றத்தையும் வாங்குவோர் தானே ஏற்கவேண்டியதாக இருக்கிறது.

இப்படிப் பல வழிகளிலும் ஏழைகளின் இரத்தத்தை உறுஞ்சும் இந்தச் சர்க்கார் எத்தனை நாளைக்குத்தான் நிலைத்துவிட முடியும்? ஏழை மக்களை மக்களாக மதிக்காமல் வரிதாங்கும் சுமைத்தாங்கியாக எவ்வளவு காலத்துக்குத்தான் வைத்திருக்க முடியும்! காலம் விரைவில் பாடம் புகட்டும். சந்தேகமில்லை!

★


## 10-4-60 முதல்

தம்பிக்கு **அண்ணன்** அளிக்கும்,

## இனிய விருந்து

இனித் துவளாது தொடர்ந்து கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு:- விற்பனையாளர்கள் தங்களுக்குத் தேவையான இதழ்களின் எண்ணிக்கை விபரத்தை உடனே தெரிவிக்கவும்.

பொறுப்பாளர்.


காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.